Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3—No. 7.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௩ | பிரமோதூத ஆண்டு ஆடித் திங்கள்<br>1930ஹ ஜூலை | இதழ் எ |
|---|---|---|

உள்ளுறை | பக்கம்

| | |
|---|---|
| சமாஜ வெள்ளி விழா ... ... ... | கரு௭ |
| சமாஜ ஆண்டு விழா நடந்த இடங்களும் தலைவர்களும் ... | க௬0 |
| பஞ்சாக்கர மாலை ... ... ... | க௬௨ |
| கோகழி ... ... ... ... | க௬௩ |
| கேவேடரும் கெளிரும் ... ... ... | க௬௫ |
| திருக்கோயில் ... ... ... | க௬௬ |
| ஒழுக்கம் ... ... ... ... | க௬௯ |
| சிவஞானபோத விளக்கம் ... ... ... | க௫௬ |
| மதிப்புரை ... ... ... ... | க௯0 |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,
உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.

தனிப் பிரதி அணா 3.

## ஆலங்குடி என வழங்குந் திருஇரும்பூளையின்
## மகா கும்பாபிஷேகத்தின்பொழுது கூடிய
## சைவ சித்தாந்த மகா சமாஜ

# விசேஷ மகா நாட்டின் நடைமுறை

---

சிவனடியார் திருக்கூட்டங்க ளெல்லாவற்றினுஞ் சிறந்தது ஒரு கோயிலின் கும்பாபிஷேகத்தின்பொழுது கூடுங் கூட்டமாகும். அவ்வாறு ஆலங்குடிக் கோயிற் கும்பாபிஷேகத்தின்பொழுது கூடிய கூட்டத்திலுள்ள அறிவாற்றலால் சிறந்த பெரியார்களுக்குச் செவிக் குணவையும் அஃதில்லாதபோது சிறிது வயிற்றுணவையும் ஈயும் எண்ணத்துடன் இம்மகா நாடு கூட்டப்பட்டது.

இதற்குத் தலைமை வகிக்க மகிபாலன்பட்டி பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் ஒப்பியிருந்தனர். திருவருட் செயலால் அவர் தாயார் சிவனடி நீழலெய்திவிடவே, அவருக்குப் பதிலாக, சித்தாந்த சைவத்திற்கே தம் உடல் பொருள் ஆவி மூன்றையுங் கொடுத்துதவி வருகின்ற உயர்சைவத் திருவாளர் **விாலையானந்த சுவாமிகள்** தலைமை ஏற்றனர்.

---

அன்னார் சென்ற வைகாசிமீ ௧௮-ஆம் தேதி சனிக்கிழமை மாலை $2\frac{1}{2}$ மணிக்கு ஆலங்குடி மாரியம்மன் கோவிலிலிருந்து ஷியூர் முதலியார் தெருவில் ஏற்படுத்தியிருந்த மகாநாட்டுத் தனிக் கொட்டகைக்கு மேளதாளத்துடன் தமியங்கி (மோட்டார்) வண்டியில் பல பெரியார்களால் அழைத்து வரப்பட்டனர். உடனே மகா சமாஜக் காரியதரிசியார் திரு. ம. பால சுப்ரஹ்மண்ய முதலியார் B. A. B. L. அவர்கள் ஓர் அழகிய சுருக்கமான பேச்சால் யாவரையும் வரவேற்று, தலைவரையும் நியமித்தனர். பின் சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு, தொண்டைநாடு, நடுநாடுகளிலிருந்து வந்த பெரியார்கள் அதை ஒட்டிப் பேசினர். அடிகள் தலைவராக அமர்ந்ததும் வரவேற்புக்கழகக் காரியதரிசியும் ஆலங்குடி உபாத்தியாயருமாகிய திரு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை யவர்களால் வரவேற்புத்தாள் வாசித்து வழங்கப்பட்டது.

பின் தலைவர் தமது அரிய முன்னுரையை, 'திருக்கோயிலும், நித்திய நைமித்திகங்களும்' என்னும் பொருள்பற்றிப் பெருமாரியாகப் பொழிந்தனர். கோயிலின் அமைப்பு, ஆங்கு நடக்கும் கிரியை இவைகளின் உட்பொருள்களடங்கிய இச்சொற்பொழிவின் சுருக்கம் அன்பருதவியால் ஒரு சிறு நூலாக அச்சிற்கு வாக்கூடும். பின் திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் 'சைவ சமயமே சமயம்' என்னும் பொருள்பற்றிச் சைவத்தின் ஒப்பற்ற நிலையையும், உயர்வையும் உண்மையையும் இனிது நிறுவினார்கள். அதன்பின் பல்லாவரம் திரு. மறை. திருநாவுக்கரசு 'சமய குரவர்'களின் அருமை பெருமைகளையும், அருஞ்செயல்களையுந் தன் தந்தை அறிவிற்கேற்ப அன்புடன் விளக்கினர். அடுத்தபடியாக தஞ்சை திரு. ப. சிவகுருநாதம் பிள்ளையவர்கள் 'தந்தைசொன் மிக்க மந்திரமில்லை' என்னுந் தலைப்புப்பற்றித் தந்தையாகிய அப்பரடிகளின் அருஞ்சொல்லாகிய 'திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்' என்னுந் திருத்தாண்டகத்தின் பொருள் விரியப் பெருஞ் சொற்பொழிவு நிகழ்த்தித் தம் பெயருக்கேற்ப உபதேச குருவாய்ச் சைவநெறி யாவருள்ளத்தும் ஊன்றும்படி செய்தனர். கடைசியாக திரு. கே. ஆறுமுகம் பிள்ளை யவர்கள் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆநந்தமாய தேனினைச் 'சமய வளர்ச்சி' என்னுந் தலைப்பின்கீழ்த் தேக்கறச் சொரிந்தது அன்பர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஒவ்வொரு சொற்பொழிவின் பின்னும் தலைவர் கருத்துரை பல அரிய பெரிய நுட்பங்களை எளிதாகவுந் தக்க ஆர்வத்துடனும் விரித்துரைத்தது. அவற்றுள் திருநீற்றின் பெருமையும், மூத்த பிள்ளையாரின் உருவ உட்பொருளும் யாவர் நெஞ்சிலும் என்றும் அகலாது பதிந்துகிடக்கும்படி புகட்டப்பட்டது. இடை யிடையே இன்னிசையுடன் தேவாரம் ஓதப்பெற்றதுடன் முடிவிலும் முறைப்படி திருமுறைகள் ஓதப்பெறக்கூட்டங் கலைந்தது.

மறுநாட் காலை (௧௯௨ |ஞாயிற்றுக்கிழமை) முத்துவிதான மணி பொற்கவரி முறையாலே பத்தர்களோடு பாவையர் சூழவும், பல்லியங்கறங்கவும், பண்ணிசை முரலவும் அரவெனு மொலி முழங்கிப் பரவவும் பெருஞ் சாந்தியாகிய கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. பின் தண்டமிழ்வாணர் மிக்கிருந்தபடியால் நிகழ்ச்சி முறையிற் காணுதிருந்தும் காலையிலேயே சங்கங் கூடுவதாயிற்று. திரிசிரபுரம் திரு. ஒ. பெரியசாமி பிள்ளை யவர்கள் 'திருக்குறள்' என்னும்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

“ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு”

| மலர் ௩ | பிரமோதூத ஆண்டு ஆடித் திங்கள்<br>1930 ௵ ஜூலை ௴ | இதழ் ௭ |
| --- | --- | --- |

## சமாஜ வெள்ளி விழா

[பத்திராசிரியர்]

வெள்ளிக் குழைத்துணி போலுங்
  கபாலத்தன் வீழ்ந்திலங்கு
வெள்ளிப் புரியன்ன வெண்புரி
  நூலன் விரிசடைமேல்
வெள்ளித் தகடன்ன வெண்பிறை
  சூடிவெள் ளென்பணிந்து
வெள்ளிப் பொடிப்பவ ளப்புறம்
  பூசிய வேதியனே—**அப்பர்.**

**வெ**ள்ளியங்கிரியிலே பனித்த சடையும் பால்வெண்ணீறும் வெண்தலை மாலையு முடையராய் வெள்ளை எருதேறி, பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கட்குக் காட்சி கொடுப்பவர் சிவபெருமானார் என்பது சைவநூற் றுணிபு. களங்கமற்ற சுத்த சாத்வீகமே குணமென்னும் குன்றாக வெள்ளியங்கிரியாய் நின்றதுபோலும். மக்களும் தங்கள் வாழ்க்கையில் ராஜஸ, தாமச குணங்களை யொழித்து சுத்த சாத்வீகத்தில் வேரூன்றி அசைவற்று ஓங்கி வளர்ந்துயர்ந்தால் கடவுட்டன்மைக்கு உறைவிடமாவர் என்பதை அறிவுறுத்தவே வெள்ளியங்கிரி நிற்கின்றது போலும். ஞாயிற்றின் வெண்கதிரே போன்று இறைவன் திருமுடியினின்றும் பனித்த சடைக் கதிர்கள் பல்வேறு திசைகளிலும் பரந்து செல்கின்றன. புறவிருளை நீக்கும் பகலவன் கதிரேபோல் அகவிருளை நீக்குவான் வேண்டி முழு அறிவினனாகிய முதற் கடவுள் முடியினின்றும் அறிவுக் கதிர்கள் மிக்க ஒளி வீசிப் பரந்து விரைந்தோடுவதை இறைவன் பனித்தசடை குறிக்கின்றதுபோலும். இருள் சேர் மும்மலங்களையும் சுட்டெரித்த விடத்தே வெண்மையான அகத்தூய்மையும் உள்ளப் புனிதமும் தோன்றும் என்பதையும் மகா சங்கார காலத்துச் செத்துச் செத்துப் பிறக்

கின்ற தேவெல்லாம் வெந்தொழிய வெந்த பிடிசாம்பரைப் பூசி மயானத்து நிற்கும் ஈறிலான் தானே என்பதையும் இறைவன் தன் திருமேனியில் விளங்கும் பால் வெண்ணீற்றினால் விளக்குகின்றான் போலும். செத்துப் பிறக்கும் தேவ தேவர்களின் தலையோடுகளையே மாலையாகத் தொடுத்து அணிந்துள்ளான் போலும். தரும விடை, ஆன்மவிடை, மால்விடை என முத்திறத்ததாகக் கருதப்படும் மலங் கெட்ட பொருளே தனக்கு ஊர்தியாகுந்தகையது என்பதை அறிவுறுத்தவே சுத்த வெள்ளை எருதேறுவது ("நரை வெள்ளேறு ஒன்றுடையானை") இறைவன் வழக்குபோலும்.

இறைவன் திருவுருவத்தின் சார்புடை இவ்வெள்ளிப் பொருள்கள் மேற்கூறியவற்றால், மக்கள் வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதற்குரிய அறிவை யூட்டும் அரிய பொருள்களாக வுள்ளன என்பது தெள்ளிதின் விளங்கும். இவ்வெள்ளிப் பொருள்களைக் கொண்டாடுவதற்கு ஒரு வெள்ளிவிழா நடத்துவதும் மிகப் பொருத்தமே யாம்.

இவ்வுலகத்தில் உண்மைத் துறையில் முடிந்த முடிபாகவுள்ளது சுத்தாத்துவித சைவசித்தாந்தம். ஏனைய கொள்கைகளை யெல்லாம் இச்சித்தாந்தத்தினுள் சோபான முறையில் படிகளாக வைத்தெண்ணுவது ஆன்றோர் வழக்கு. முப்பொருளுண்மை, சத்காரிய வாதம், மறுபிறப்புண்மை, இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், உருவவழிபாடு முதலிய சாதனங்கள், திருவருள் நெறி முதலிய பல தலைப்புக்களின்கீழ் வைத்துப் பல மேற்கோள்களோடு பன்னிரு திருமுறை பதினான்கு சாத்திரங்களின் துணைகொண்டு போதிக்கப்படுவது சைவசித்தாந்தம்.

கடந்த நூற்றாண்டிலும் அதற்கு முந்திய பல நூற்றாண்டுகளிலும் சைவசித்தாந்தம் மிகத் திறம்பட பல புலவர்களாலும் பல மடாதிபதிகளாலும் குருமாணவன் முறையில் போதிக்கப் பட்டுவந்தது. இந்நூற்றாண்டிலே சமயத்துறையேயன்றிமற்றெல்லாத்துறைகளிலும் இப்போதனுமுறை கைவிடப் பட்டமையால் நமது சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு வேறு சாதனங்களைத்தேடுவது அவசியமாயிற்று. தற்போது அரசாங்கத்தார் ஆதரிக்கும் சமயமாகிய கிறிஸ்தவ சமயத்தினர் தங்கள் சமயத்தைப் பரப்பும் முறைகள் பெரிதும் பயன் விளைப்பது கண்கூடென்று நமது சமயிகள் பலர் உணர்ந்தனர். சொற்பொழிவு, மகாநாடு, துண்டுப் பிரசுரம், பத்திரிகை, புத்தக வெளியீடு முதலிய பல வழிகளில் கிறிஸ்தவ சமயிகளைப்போல் நாமும் நமது சமயத்தைப் பரப்புவது இன்றியமையாத சமயக்கடன் என்று உணர்ந்த நமது சமயத் தலைவர்கள் பலர் அவ்வாறு உழைத்தற்கு ஒரு பெரிய அமைப்பு தேவையென்றுணர்ந்தனர். 1905ஞு ஜூலை 7௳ ஆகிய நன்னாளில் சமயகுரவரைக் கரையேற விட்ட திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் திருமடத்தில் அம்மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திருமுன்பு ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என வழங்கும் மறைமலையடிகளாலும் காலஞ்சென்ற சைவத் திரு. ஜே. எம். நல்லசாமி பிள்ளையவர்களாலும் சைவசித்தாந்த மகாசமாஜம்

என்ற பேரவை ஒன்று நிறுவப்பட்டது.

உயர் திரு மறை மலையடிகளார் ஐந்து ஆண்டுகள் மிகச் செம்மையாக சமாஜக் காரியங்களை அல்லும் பகலும் அனவரதமும் கவனித்து நடத்திவந்தனர். ஆண்டு விழாக்கள் செந்தமிழ் நாட்டின் பல பாகங்களில் காங்கிரஸ் மகா சபையின் ஆண்டு விழாக்களே போல் மிகச் சிறப்பாகவும் உயரிய முறையிலும் நடைபெற்றன. முக்கியமான ஊர்களிலெல்லாம் சமாஜத்தின் கிளைச் சபைகள் நிறுவப்பட்டன. சமய போதனை மிக ஊக்கத்துடன் அளிக்கப்பட்டது.

உயர் திரு மறை மலையடிகளுக்குப் பின்னர் முறையே திருவாளர்கள். இ. ஆதிமூல முதலியார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை, கி. குப்புசாமி முதலியார், கா, சுப்பிரமணியம் பிள்ளை, வா. தி. கோவிந்தராஜ முதலியார் ஆகிய பேரறிஞர்கள் 1921ஆம் டிசம்பர்மீ வரையில் காரியதரிசிகளாயிருந்து சமாஜத்தின் வேலைகளைத் திறம்பட நடத்திவந்தார்கள்.

1912ஆம் "சித்தாந்தம்" என்ற மாதப்பத்திரிகை தொடங்கப்பட்டு 1920ஆம் பல மாதங்கள் வரையில் ஒழுங்காக நடந்து வந்தது. இதற்கு முதலிலிருந்து 1918ஆம் வரை சிவ ஸ்ரீ கல்யாண சுந்தர யதீந்திரர் பத்திராசிரியாகவும் பிறகு திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் பத்திராசிரியராகவும் இருந்து பேருதவி புரிந்தார்கள். ஐரோப்பிய யுத்தத்தின் பிறகு காகிதம் விலையுயர்ந்ததனாலும் வேறு பல காரணங்களாலும் 1920-ம் ஆண்டின் இடையிலே பத்திரிகை நிற்க நேர்ந்தது.

1921ஆம் டிசம்பர்மீ முதல் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் காரியதரிசியாகவிருந்து வருகிறார். 1924ஆம் ஜனவரிமீ முதல் 1926ஆம் மேமீ வரை "சிவஞான சித்தியார்" வாரத்துக் கொருமுறை திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்களால் பாடமாக நடத்தப்பட்டது. 1929ஆம் ஜனவரிமீ அப்பேரறிஞரால் "சிவ ஞான போதம்" பாடம் தொடங்கப் பெற்றது. 1928ஆம் ஜனவரிமீ முதல் "சித்தாந்தம்" பத்திரிகை மீண்டும் தொடங்கப் பெற்று 1929ஆம் ஜனவரிமீ வரையில் திரு. மணி. திருநாவுக்கரசு முதலியாரையும், பிறகு, திரு. ம. பால சுப்பிரமணிய முதலியாரையும் ஆசிரியராகக் கொண்டு நடைபெற்று வருகிறது.

சாதாரணமாகக் கொண்டாடப்படும் ஆண்டுவிழாக்கள் முதலியன நீங்கலாக, 1929ஆம் மார்ச்சு மாதத்தில் திருநெல்வேலியில் சைவப் பெரியார் தனிக்கூட்டம் ஒன்று கூடிப் பல உண்மைகளையும் தீர்மானங்களையும் ஒழுங்குபடுத்தி வெளியிட்டது. இதற்குத் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் தலைவராயிருந்து உபகரித்தார்கள். 1929ஆம் மேமீ திருப்பாதிரிப் புலியூரில் உயர்திரு மறை மலையடிகள் தலைமையில் இவ்வுண்மைகளும் தீர்மானங்களும் பரிசீலனை செய்யப்பட்டு நிறைவேறின; சமயத்தொண்டுக்குரிய பல வழிகளும் வகுக்கப்பட்டன.

இவ்வழியில் ஈடுபட்டு நமது சமாஜம் சென்ற ஆண்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் பதினாயிரம் பிரதிகளையும் இவ்வாண்டில் அப்பர் சுவாமிகள் தேவாரம் ஐயாயிரம் பிரதிகளையும் வெளியிட்டுள்ளது. ஏனைய திருமுறைகளையும், பதினான்கு சாத்

திரங்கள் முதலிய சமய நூல்களையும் விரைவில் ஆயிரக்கணக்கில் வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பொருளுதவி விரைவில் கைகூடின் இம்முயற்சிகள் நன்குபயன் தரும் என்பது யாவருமறிந்தது.

சமயப்பற்று, மொழிப்பற்று, உண்மையில் பற்று, ஒழுக்கத்தில் பற்று முதலிய உயரிய பற்றுக்களெல்லாம் மிகக் குன்றியுள்ள இக்காலத்தில் நமது சமாஜம் இவ்விருபத்தைந்து ஆண்டுகளாக இந்நாட்டிலே செய்துள்ள பணி மிகச் சிறிதே யெனினும், தினைத் துணை நன்றியைப் பனைத்துணையாக் கொள்வது ஆன்றோர் வழக்காதலால், அன்னோர் நமது சமாஜம் செய்துள்ள பணியையும் பெரிதாகவே கொள்வர். நம் தமிழ்நாட்டில் ஒரு பெரிய சபை இருபத்தைந்து ஆண்டுகள் உயிரோ டிருப்பதே மிக அரிது, உயரிய முறையில் பணி யியற்றுவது அரிதினும் அரிது. நமது சமாஜத்தின் பணியின் பெருமையெல்லாம் சமாஜத்தைச் சேர்ந்த பணியாளர்களின் பெருமையையே பொறுத்தது.

நமது சமாஜம் செய்துள்ள பணி இனிச் செய்யவேண்டுவதை நோக்க மிகச் சிறிதென்றே கொள்ளலாம். இச்சிறுமை நமது சைவ மக்களின் ஊக்கத்தின் சிறுமையையும் உறக்கத்தின் பெருமையையும் அளக்குமோர் அளவு கோலா யிருக்கிறது.

இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவில் வெள்ளி விழாவையும் (Silver Jubilee) ஐம்பதாம் ஆண்டின் இறுதியில் பொன் விழாவையும் (Golden Jubilee) அறுபதாம் ஆண்டின் முடிவில் மணி விழாவையும் (Diamond Jubilee) கொண்டாடுவது ஆங்கில வழக்கு. அம்முறை பற்றி மற்றோரிடத்தில் வெளியிட்டுள்ள நிகழ்ச்சிமுறை விவரப்படி நமது சமாஜத்தின் வெள்ளி விழா நடைபெறும்.

இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் வெள்ளிவிழாவுக்கு வந்தாவது, சமயப் பணிக்குரிய செய்தி, பொருள் முதலியன அனுப்பியாவது தத்தம் சமயக்கடனை ஆற்றவேண்டும். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் முன்னின்று நம் சமாஜ வெள்ளி விழாவைச் செவ்வனே நடத்தி நம் சமாஜத்தினருக்கு நீண்ட ஆயுளையும் திரண்ட பொருளையும் கொடுத்து அவர்களைத் தூய சமயப் பணியில் ஈடு படுத்தி நமது சமாஜத்தின் திருப்பணிகட்கெல்லாம் அவர்களைத் துணை நிற்கும்படி செய்து சமாஜப் பொன்விழா, மணிவிழாக்களைக் கண்டு அவர்கள் இறும்பூ தெய்துமாறு கருணை புரிய வேண்டுமென இறைவன் திருவுருவைச் சார்ந்த வெள்ளிப் பொருள்களை வழுத்துகின்றோம்.

## சமாஜ ஆண்டுவிழா நடந்த இடங்களும் தலைவர்களும்

| சமாஜ ஆண்டு | ௵ | இடம் | தலைவர் |
|---|---|---|---|
| 1. | 1906 | சிதம்பரம் | Sir P. இராமநாதன் அவர்கள். |
| 2. | 1907 | சிதம்பரம் | திரு. பாண்டித்துரைத் தேவரவர்கள். |
| 3. | 1908 | நாகப்பட்டணம் | J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள். |
| 4. | 1909 | திரிசிராப்பள்ளி | திரு. கனகசபைப் பிள்ளையவர்கள். |
| 5. | 1910 | இராமநாதபுரம் | Sir K. P. புட்டண்ண செட்டியாரவர்கள். |
| 6. | 1911 | சென்னை | திரு. J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள். |
| 7. | 1912 | காஞ்சிபுரம் | திரு. T. பொன்னம்பலம் பிள்ளையவர்கள். |
| 8. | 1913 | வேலூர் | ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள். |
| 9. | 1914 | கூடலூர் | ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள். |

சமாஜ ஆண்டு ௵ இடம் தலைவர்

10. 1915 தஞ்சாவூர் - ஸ்ரீமத் அம்பலவாண நாவலரவர்கள்.
11. 1916 திருமயிலாப்பூர் - திரு. S. சபாரத்தின முதலியாரவர்கள்.
12. 1917 செம்பியம் - சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரரவர்கள்.
13. 1918 கும்பகோணம் - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள்.
14. 1919 திருபனந்தாள் - ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகள்.
15. 1920 மாயவரம் - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள். [டிதரவர்கள்.
16. 1921 கும்பகோணம் - மஹாமஹம் (மாசி௴) ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்
,, 1921 சென்னை - (மார்கழி) ராவ்பஹதூர் திரு. P. M. சிவஞான முதலி
17. 1922 சென்னை - Sir. P. இராமநாதன் அவர்கள். [யாரவர்கள்.
18. 1923 சென்னை - திவான்பஹதூர் திரு. P. சுப்பையா முதலியாரவர்கள்.
19. 1924 திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவா
20. 1925 சென்னை - Sir P. இராமநாதன் அவர்கள். [சாரிய சுவாமிகள்.
20. 1925 ,, - ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்.
21. 1926 ,, - திவான்பகதூர் P. சுப்பையா முதலியாரவர்கள்.
22. 1927 ,, - (ஜூலை௴) ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.
22. 1927 புதுச்சேரி - (டிசம்பர்) ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.
23. 1928 சென்னை - Sir T. N. சிவஞானம் பிள்ளையவர்கள்.
24. 1929 திருநெல்வேலி-சைவப் பெரியார் தனிக்கூட்டம் (மார்ச்சு௴) திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள்.
,, 1929 திருப்பாதிரிப்புலியூர்- சைவர் மகாநாடு (மே௴) ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்.
,, 1929 திருவெண்ணெய் நல்லூர் - (டிசம்பர்௴) ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.
25. 1930 திருஇரும்பூளை-(கும்பாபிஷேக மகாநாடு - மே, ஜூன்௴) ஸ்ரீலஸ்ரீ வாலையாநந்த சுவாமிகள்.
,, 1930 பிப்ரவரி௴ சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைவி - ஸ்ரீமதி இராஜம்மாள்.
,, 1930 ஏப்ரல்௴ சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைவர் - கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள்.

## சமாஜ காரியதரிசிகள்

1905—1910 ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்.
1910—1911 திரு. இ. ஆதிமூல முதலியார் அவர்கள்.
1911—1912 திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள்.
1912—1917 திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள்.
1917—1920 திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளையவர்கள்.
1920—1921 திரு. வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள். [ரவர்கள்.
1921—1930 (நாளதுவரை) - திரு. ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியா

## "சித்தாந்தம்" பத்திராசிரியர்கள்

1912—1918 சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரர் அவர்கள்.
1919—1920 திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள்.
1928— திரு. மணி-திருநாவுக்கரசு முதலியாரவர்கள். [ரவர்கள்.
1929— முதல் நாளது வரை- திரு. ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியா

# பஞ்சாக்கர மாலை

[இலக்கண விளக்கவாசிரியர் பரம்பரை சோமசுந்தர தேசிகர்]

**ப**ஞ்சாக்கரமாலை என்பது ஒரு நூலின் பெயர். இது பஞ்சாக்கரங்களைப் பற்றிச் சொல்லும் கோவையான ஒரு நூல் என்றுவது பஞ்சாக்கரத்தின் மாலை என்றுவது பொருள்படும். பஞ்சாக்கரங்களாவன :—சைவ சமயத்துக்கு ஆணிவேர் போன்று சைவ சமயத்தின் கொள்கைகளை யெல்லாம் அடக்கிக் கொண்டிருக்கும் எழுத்துக்களாம். இதனை,

"விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே"

என்று நமது அப்பர் சுவாமிகளும் அருளியுள்ளார்கள்.

'அகார உகார மகாரங்களிடத்திற் ரோன்றப்பட்ட ஐம்பத்தோ ரட்சரத்திலும் பிரமனுடைய அங்கிசமாகிய அகாரத்திற் ரோன்றிய அச்சாகிய பதினாறெழுத்தையும் கீழாகக்கழித்து, உகாரத்திற் ரோன்றிய இருபத்தைந் தெழுத்தில் கவ்வர்க்கம் நான்கும் சவ்வர்க்கம் நான்கும் டவ்வர்க்கம் நான்கும் தவ்வர்க்கம் நான்கும் பவ்வர்க்கம் நான்குமாக இருபதெழுத்தும் ஙஞண நமவாகிய சுன்னென்று சொல்லப்பட்ட எழுத்தைந்துமாகஇருபத்தைந்தெழுத்தும் விட்டுணு அங்கிசமாகிய உகாரத்திற் ரோன்றினமையால் இவற்றையுங் கீழாகத் தள்ளிச் சிவனை நகமக்காரம் பண்ணுதல்விட்டுணுவுக்குள்ள தொழிலாகையால் சுன்னாகிய எழுத்தைந்தில் ஙகார ஞகார ணகாரமாகிய மூன்றெழுத்தையும் நீக்கி நகார மகாரமாகிய இரண்டெழுத்தையுங் கூட்டி நமவாக்கி அப்பால் உருத்திராங்கிசம் மஹேசுராங்கிசம் சதாசிவாங்கிசமாகியும் விந்து நாதமாகியுமுள்ள மகரத்திற் ரோன்றிய எழுத்து பத்தினுட் சிகார வகார யகாரங்களைக் கூட்டிச் சிவாயவென வைத்து நமசிவாய வென்ன' வெழுமென்பர். இதுபோன்று பஞ்சாக்கரத்தின் பெருமையைக் கூறும் நூல்கள் பல உள. **சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம்** ஆதிய நூல்கள் பொதுவகையாகப் பஞ்சாக்கரத்தைக் கூறுகின்றன. **திருவருட்பயனில் அஞ்செழுத்தருணிலை** என ஒரு அதிகாரம் தனிப்பட வகுக்கப்பட்டிருக்கின்றது. மற்றைய சித்தாந்த சாத்திரங்களிலும் பஞ்சாக்கரங்களைப் பற்றிய குறிப்புக்களுண்டு. **பஞ்சாக்கர உண்மை** யென ஒரு வசன நூல் திருவாவடுதுறை யாதீனத்து அம்பலவாண தேசிகரால் தமது சீடர்கள் பொருட்டு கூறப்பட்டுளது.

இனிப் பஞ்சாக்கரம், ஸ்தூல பஞ்சாக்கரம், சூக்குமபஞ்சாக்கரம் காரண பஞ்சாக்கரம் முதலாகப் பல பகுதிகளாகப் பகுக்கப்பட்டு அவற்றை யுச்சரிக்கு முறையும் கூறப்படும். இவ்வக்கரங்கள் மாறுபடுத்தியும் உச்சரிக்கப்படும். அவற்றிற்கும் பொருளும் உண்டு. சிதம்பர சக்கரமும் இப்பஞ்சாக்கர பேதமேயாகும். இவைகள் குருமுகமாகவன்றி வேறு கூறுதலாகாதென ஒரு கொள்கையுண்டு. மந்திரங்கள் என்ற முறையில் அவற்றிற்கு ஒரு வன்மையும் சக்தியு முண்டென்பது மந்திரம் வல்லார் பலரு மறிந்த விஷயம்.

இனிப் பஞ்சாக்கரமாலை என்ற இந்நூல் காப்பு உள்பட அறுபது வெண்பாக்களையுடையது. ஒரு வாழ்த்துச் செய்யுளையு முடையது. இந்நூலில் பஞ்சாக்கர முண்டான வழி, அதன் பயன், ஸ்தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், ஞான பூசையில் அவை உபயோகப்படு முறை யாதியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் மூல மட்டும் இற்றைக்கு முப்பத்திரண்டு ஆண்டுகட்கு முன்னர் சென்னைமா நகரில் ஒரு பெரியாரால் வெளியிடப்பட்டது; ஆயினும் அவர்கட்குச் சுத்தப் பிரதி கிடைக்காமையாற் போலும் சிறிது பிழையுடன் பதிக்கப்பட்டுளது. அவர்கள் இந்நூலின் ஆசிரியர் இன்னாரென்று கூறினார்களில்லை. பின் வந்தாரொருவர் மறைஞான சம்பந்தரென்று கூறினார். அதற்கு ஆதார மொன்று மிலது. துறைசையாதீனத்தைச் சார்ந்த பெரியாரொருவர் கூறினாரென்பர் ஒரு சாரார். அதுவுமாதார மில்லாக் கூற்றாம். இஃது ஒழிவிலொடுக்கம் இயற்றிய காழிக்கண்ணுடைய வள்ளலால் இயற்றப்பட்டதென்று ஏடுகள் காட்டுகின்றன. அதற்கேற்ப அவருடைய மாணவர் வாக்காக,

"காழிநகர் வாழி கவுணியர்கோன் றாள்வாழி
வாழியருட் கண்ணுடைய வள்ளல்தாள் வாழி [சையின்
தெய்வத் தமிழ்ப்பாடல் வாழி திருநெறியாஞ்
சைவத்தவர் வாழி தான்"

என்ற செய்யுளும் காணப்படுகின்றது. கண்ணுடைய வள்ளலார் வாக்கென்ற மாத்திரை யானே நூலின் பெருமை சொல்லாமலே விளங்கும். ஆயினும் இந்நூல் மந்திரங்கள் பொதிந்திருத்தலினால் எளிதிற் பொருள் விளங்குவதன்று. அதற்குச் சிறந்ததொரு பொழிப்புரை யுண்டு. இஃதின்றேல் இந்நூலினாற் சைவநன்மக்களுக்கு யாதொரு பயனுமின்றாம். இந்நூலுரைகாரர் இன்னாரெனக் கூற முடியவில்லை; சாத்திரங்களை நன்கறிந்த பெரியார் என்பதில் மாத்திரம் ஐயமில்லை. இவ்வாறுயர்ந்த இந்நூலையும் உரையையும் சைவ உலகு கண்டுமகிழ வேண்டியது இன்றியமையாதது.

---

# கோகழி

[வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார்]

1. திருவாசகத்தே இக் கோகழி என்னும் மொழியினுக்குத் திருவாவடுதுறை என்னுந் திருப்பதியே பொருள் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். திருவாதவூரடிகளே தாம் அருளிய திருவாசகம் என்னும் நூலகத்தேனும் திருக்கோவையார் என்னும் நூலகத்தேனும் ஓரிடத்தும் திருவாவடுதுறை என்னுந் திருப்பதியினைக் குறிப்பாகவும் பாராட்டினரல்லர்.

2. அடிகள் வேறு பல திருப்பதியினைப்பாராட்டி இருக்கின்றனர். அவற்றுள் திருவிடைமருதூர் என்னுந் திருப்பதியும் ஒன்றாகும். திருவிடைமருதூர் என்னுந் திருப்பதியினை மிகவும் அடுத்துள்ளதும் அதனோடு தொடர்புடையதுமான திருவாவடுதுறை என்னுந் திருப்பதியினை அடிகள் பாராட்டாது விட்டதன் உண்மையினை நடுநின்றாயும் அறிஞரே அறிவர்.

3. அடிகள் தம்முன் ஒரு நூலகத்தும் வழக்காற்றினும் எவராலும் ஆளுதல் இல்லாத **கோகழி** என்ற இம் மொழியினைத் தம்மால் ஒருமுறையும் பாராட்டப்படாத **திருவாவடுதுறை** என்னுந் திருப்பதியினுக்குப் பெய**ராகக் கோண்டிரார்.** ஆகையால், ' இக் கோகழி' என்னும் மொழியினைத் திருவாவடுதுறை என்னுந் திருப்பதியினுக்குப் பெயராகக் கொள்ளுதல் கவிக் கருத்தாகாது.

4. திருவாளர் நாகை - வேதாசலம் பிள்ளை (மறைமலை யடிகள்) அவர்கள் தாம் எழுதிய உரை நூலகத்தே **கோகழி** என்னும் இம்மொழியினுக்குத் **திருப்பெருந்துறை** என்னுந் திருப்பதியே பொருள் என்று சில ஏதுக்களைக் காட்டிக் கூறுகின்றனர்.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் [அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற நம்மோத் தாணையின்படி யான் **கோகழி** என்ற இம்மொழியால் திருப்**பெருந்துறை** என்னுந் திருப்பதியாகிய பொருளினைச் சுட்டுதல் கவிக்கருத்தாகுமா என்பதனை ஆய்வன்.

6. சிவபுராணத்தகவல் அடி 3-லும் 15-லும் முறையே,

"கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க"

என்றும்,

"சீரார் பெருந்துறை நந்தே வனடிபோற்றி"

என்றும், பண்டாய நான்மறை பாட்டு 5-ல்,

"நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் [போயகல
எண்ணி யெழுகோ கழிக்கரசைப்–பண்ணின்
மொழியாளோ டுத்தரகோச மங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்."

என்றும், அடிகள் அருளி இருப்பன யாவும் அறிஞரிற் பலர் அறிந்தனவே யாகும்.

7. **கோகழி திருப்பெருந்துறை** என்னும் இவ்விரு பெயர்களையும் **திருப்பெருந்துறை** என்னுந் திருப்பதியினுக்கே அடிகள் பெயராகக் கொண்டிருப்பின், ஒரே பாட்டில் ஒரு பொருளினை மரபு நெறி தவறி வாளா இருமுறை கூறுர். அவர் கூறினர் எனின், அஃது கூறியது கூறுதல் என்னுங் குற்றம் ஆகும் அன்றே? ஆகையால் மேற்காட்டிய ஏதுக்களின்படி **அடிகள் தாமும் கோகழி என்பது ஒரு திருப்பதி, திருப்பெருந்துறை என்பது மற்றோர்திருப்பதி என்றே கோண்டனர் என்று நாம் கொள்ளுதல் நேர்மையாகும். இப்படியன்றி, கோகழி என்னும் பெயரால் திருப்பெருந்துறை என்னுந் திருப்பதியினைச் சுட்டுதல் கவிக் கருத்தாகாது.**

8. கீர்த்தித் திருவகவல்அடி 54லும் 88-லும் முறையே அடிகள்,

" திருவார் பெருந்துறைச் செல்வனுகி "

என்றும்,

" கழுமல மதனில் காட்சி கொடுத்தும் "

என்றும் அருளி இருத்தலாலும், திருவாசகத்தே பல விடத்தும் சிவபுரம் கழுமலம் (காழி) ஆழி என்றும், திருக்கோவையாரகத்தே காழி என்றும், **திருக்காழி அல்லது சீகாழி என்னுந் திருப்பதியினைப் பாராட்டி இருத்தலாலும்,** சிவபுரம்-கழுமலம்-காழி என்ற பெயர்கள் திருக்காழி அல்லது சீகாழி என்னுந் திருப்பதியினுக்குப் பெயர்களாக இருத்தலாலும், **இக்கீர்த்தித் திருவகவலகத்தே கழுமலம்** என்ற பெயரினைக் குறித்ததனுல் **கோகழி** என்னும் பெயரினைக் குறியாது விட்டிருத்தலாலும், **அடிகள் கோகழி** என்

னும் பெயரால் திருக்காழி அல்லது சீகாழி என்னுந் திருப்பதியினையே குறித்தனர் எனப் பொருள் கொள்ளுதலே கவிக்கருத்தாகும்.

9. கொழுமை+கோடி என்ற இவ்விருசொற்களுங்கூடி மரூஉவின் பாத்தியாய்த் திரிந்து ஒரு சொல் நேர்மைத்தாய் கோகுடி எனநின்றாற்போல கொழுமை+காழி என்ற இவ்விரு சொற்களுங்கூடி மரூஉவின் பாத்தியாய்த் திரிந்து ஒரு சொல் நேர்மைத்தாய் கோக்ழி என நின்று வளமுடைய காழி நகர் எனப் பொருள் தந்து நிற்றலை நடுநின்றாய்வார் ஆய்வான் இதனை யான் எடுத்துக் காட்டுதலை விரும்பினன்.

---

# கேவேடரும் கெளிறும்

[தாராபுரம் - நா. ஆறுமுகம் பிள்ளை]

திருவாசகக் கீர்த்தித் திருவகவலின் "கேவேடராகிக் கெளிறது படுத்தும்" என்ற அடிக்கு மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம் அவர்கள் வகுத்த உரையில் "இறைவன் வலைஞனாய்ச் சென்று படுத்தது சுறவுமீன் என்று திருவிளையாடற் புராணங் கூறுமாயினும் அடிகள் அதனைக் கெளிற்றுமீன் என்று கூறுதலின் அடிகள் கூற்றே கொள்ளற் பாலதாம்" என்று நிகழ்த்தியதை மறுத்துச் சித்தாந்தம் மலர் 3. இதழ் 5. 6-ல் திருவாளர் வே. மு. ஸ்ரீநிவாச முதலியார் அவர்கள் இறைவன் வலைஞனாகிப் படுத்தது சுறவு மீனே என்கிறார். இவ்வுரைக்கு ஆதரவாகத் திருக்கோவையார் ௱அ௰௭-வது செய்யுளை எடுத்துக் காட்டுகிறார்.

இறைவன் வலைஞனாகிப் படுத்த வரலாற்றுக்கும் திருக் கோவையார் ௱அ௰௭-வது செய்யுளுக்கும் ஏதொரு இயைபுமின்மையை ஒரு சிறிது உற்று நோக்குவாரும் நன்குணர்வர்; ஆகலான், இவர் கூற்று ஒப்புக்கோடற் குரியதன்று.

திரு. முதலியார் அவர்கள் கேழல் வேடர் என்பதன் மரூஉ கேவேடர் என்றும், களிறு என்பதன் திரிபு கெளிறு என்றும் கொண்டு மேற்கூறிய திருவாசக அடிக்கு "(இறைவர்) பன்றி வேட்டையராகிப் பன்றியினைப் படுத்தும்" என்று மற்றொரு பொருள் கூறுகிறார்.

இறைவன் அருச்சுனற்குப் பாசுபதம் அளிக்கவந்த ஞான்று உமைப்பிராட்டியார் வேடர் மகள் உருக்கொண்டு உடன்வரத் தாம் வேட வடிவங்கொண்டுவந்தாரென்பது வரலாறு. இதனையே மாணிக்க வாசகர் இதே கீர்த்தித் திருவகவலில் "கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள் விராவு கொங்கை நற்றடம் படிந்தும்" என்ற அடிகளால் நன்கு கூறியுள்ளார். ஆகையால், "கேவேடராகிக் கெளிறது படுத்தும்" என்ற இவ்வடிக்கும் அப்பொருளே கூறல் வழுவாம். கேவேடர் என்பதற்குப் பன்றி வேட்டையர் என்ற பொருளும் களிறு என்னும் சொல் கெளிறு எனத் திரிந்து பன்றிப் பொருள் தாலும் வழக்கின்கண்

இன்மையால் இடர்ப்பட்டு இவர் கொண்ட பொருள் பயனில் பொருளே யாம். நிற்க,

ஒரு சொற்றொடர்க்குப் பொருள் கொள்ளுங்கால் அதற்கும் முன் பின்னுள்ள சொற்றொடர்களுக்கும் இயைபு நோக்கிப் பொருள்கொள்வதே முறை. இறைவன் மீன்படுத்த ஞான்று ஆக மங்களையும் வாங்கினனென்று திருவிளையாடற் புராணங் கூறுவதனை மாணிக்க வாசகர் "கேவேடராகிக் கெளிறதுபடுத்தும்" என்ற அடியைச் சாரவைத்து "மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்" என்ற அடியால் விளக்கியுள்ளார். இங்ஙனம் விளக்கிய இயையை நோக்கின் முன்னுள்ள அடி இறைவன் மீன்படுத்த வரலாற்றையே குறிக்கும் என்பது தேற்றம்.

# திருக்கோயில்

[வீ. உலக ஊழியன்]

இஞ்ஞான்று கோயில்களைப் பற்றித் தடை விடைகள் இயல்பாக நிகழ்கின்றன. உலகத்திலே நாகரிகம்படைத்த மக்கள் யாண்டாண்டு உளரோ ஆண்டாண்டு இறைவழிபாடு செய்தற்கிடமாகிய கோயில்கள் உள்ளன. நமது நாட்டிலே யன்றிப் பிற நாட்டிலும் கோயில்கள் உள்ளன. எனினும் திருக்கோயிலின் பெருமையை நன்குணர்ந்த தமிழ்ச் சைவநன்மக்கள் பழமையான காலந்தொட்டு மிகுதியான கோயில்களைக் கட்டி இறைவழிபாடாற்றி வந்துள்ளார்கள் என்பதனை நாம் நன்கு அறிகின்றோம். தமிழ்மக்கள் இறைவனை மரத்தடிகளில் எழுந்தருளுவித்துத் தொழுதார்கள் என்பதனை "ஆல் கெழு கடவுட் புதல்வ" (திருமுரு) என்பதனால் அறிக. இக்கொள்கையை, இன்ன இன்ன கோயில்கட்கு இன்ன இன்ன மரங்கள், தெய்வமுறையும் மரங்களாக (ஸ்தலவிருட்சம்) உள்ளன எனத் தேவார முதலாகிய அருள்நூல்களுள் சிறப்பித்து எடுத்தோதப்படுதலும் வற்புறுத்தும். சனகர் முதலிய பெரியார்கட்கு இறைவன் ஆலமர நிழலில் இருந்து அருள் செய்தனன் என்பதனை "ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்கு ஈரிரு வர்க்கிரங்கி நின்று நேரியல் நான்மறைப்பொருளை யுரைத்தொளிசேர் நெறி யளித்தோன்" என்னும் ஆளுடைய பிள்ளையார் அருள்வாக்கால் அறியலாம்.

மாணிக்கவாசகர் தமக்குக் குருந்தமரத்தடியில் இருந்து இறைவன் அருள் புரிந்தார் என்பதனைத் தமது திருவாசகத்துள் "குருந்தின் கீழன்றிருந்த கொள்கையும்" (திருவாச) "செழுமலர்க்குருந்த மேவியசீர் அருளனே" (திருவாச) என்பவாதியவற்றால் விளக்கி ஓதுகின்றார். இவ்வாறு ஒவ்வோரிடத்து ஒவ்வொரு மரத்தடியில் இருந்து இறைவன் அருள் புரிந்தாராகலின், அவ்வவ்விடங்களில் அந்த மரத்தன்மையுடைய மரங்களடியில் இறைவன் திருவுருவத்தை வைத்துப் பிற்காலத்தும் வழிபட்டு வருகின்றனர். அன்றியும், குறிகளையும் அவைகளை வைத்தற்கு இடமாகவும் சார்பாகவும் உள்ள மரங்களையும் ஒன்றாகக்கொண்டு மரங்கட்கு மேடை கட்டியும் கட்டா

தும் வழிபட்டு வந்தார்கள் ; வருகின்றார்கள் எனவும் அறிகின்றோம். இவ்விடங்களை 'மன்றம்' எனச் சங்கச் சான்றோர் கூறுப.

தமிழ்மக்கள் பழங்காலத்தும் மலைப் பகுதிகளில் கோயில் கட்டித் தொழுதார்கள் என்பதனை, கண்ணப்பர் வரலாறும், காரியுண்டிக் கடவுள் (நஞ்சுண்டசிவம்) இருப்புக்கூறும் மலைபடுகடாம் என்னும் நூலும், முருகன் இருப்பாகத் திருப்பரங்குன்று, திருவேரகம், ஏனைய மலைகள் ஆகியவற்றைக்கூறும் திருமுருகாற்றுப்படையும் வலியுறுத்திச் சான்று பகர்கின்றன.

நகரங்களிலும் ஊர்களிலும் கோயில்கள் இருந்தனவெனச் சங்கநூல்களால் அறிகின்றோம். சான்றோர் நூலகத்துக் கோயில் என்னும் சொல் பெருவழக்கிற்றாக வழங்கப்பட்டுள்ளது. கோவில் என்னும் சொல்லின் மரூஉவின் பாத்தியதாய் கோயில் என்று சங்கநூலுள் வழங்கப்படும் இச்சொல் மரூஉவின் பகுதிப் பட்டதன்றாய் வழங்கப்பட்டிருந்தது சங்ககாலத்திற்கு எத்துணையோ ஆண்டுகட்கு முன்னராகல்வேண்டும் என்பது பெறப்படுகின்றதன்றோ?

கடைச்சங்க காலத்தில் ஆலவாயில் வெள்ளியம்பலக் கோயில் இருந்தது என்பதனை, "வெள்ளியம்பலத்து நள்ளிருட்கிடந்தேன்" என்பதனால் மணிமேகலை தெற்றெனக் கூறுகின்றது. "பணியியர் அத்தை நின்குடையே முனிவர் முக்கட்செல்வர் நகர்வலம் செயற்கே" (புறம்) என்பதனுள் நகர் என்பதற்குக் கோயில் எனப்பொருள் கொண்டு "முனிவரால் பரவப்படும் மூன்று கண்களையுடைய சிவபெருமான் கோயில் என அந்நூல் உரையாசிரியர் உரை கூறியுள்ளார்.

"நுதல்விழி நாட்டத்து
இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத்
தெய்வம் ஈறா
வேறுவேறு சிறப்பின்
வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின்
அறிந்தோர் செய்மின்"

என மணிமேகலை கூறுதலின், காவிரிப் பூம் பட்டினத்து இறைவன் திருக் கோயில் இருந்தது அறிகின்றோம். அற்றேல் ஈண்டு நுதல்விழி நாட்டத்து இறையோன் (நெற்றிக்கண்ணுடைய சிவன்) என்றதன்றிக் கோயில் கூறப் படவில்லை எனின், "பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" என அக்காவிரிப்பூம் பட்டினச் சிறப்புக் கூறுமுகத்தே அந்நூற்றொடர்புடைய சிலப் பதிகாரங் கூறுவதாற் கோயில் கூறியதுபெறப்படுதலின், இறைவன் திருக் கோயில் இருந்ததென்றே கூறுதல் வேண்டும்.

சிலப்பதிகார மணிமேகலையுள் அருகக் கோயிலும் பௌத்தக் கோயில்களும் இருந்தனவாகக் கூறுதலையும் சிலப்பதிகாரம் திருப்பதி மலைப்பெருமாள் கோயிலையும் திருவரங்கக் கோயிலையும் கிளந்தெடுத்தோதலையும், பதிற்றுப் பத்துத்திருவநந்தபுரத்து அநந்த சயநத்தை விதந்தெடுத் தோதலையும், பிறவும் பிற கோயில்களைக் கூறுவன வற்றையும் ஒன்றென முடித்தலால் அமைத்தல் அமைவுடைத்து.

சங்ககாலத்துக் கோ இல் என்னும் இரண்டு சொல்லும் சேர்ந்து கோவில்

கோயில் என ஒரு சொல் நீர்மைய வாயின. அவ்வாறான அச்சொல் கடவுள் இருத்தற்குரிய இடத்தையும், அரசன் உறைதற்குரிய அரண்மனையையும் குறித்தது. இறைமைக் குணமுடைய சிவத்தைக் குறிக்கும் இறைவன் என்னும் சொல் அரசனைக் குறித்தாற்போல இறைவன் இருக்கும் இடத்தைக் குறிக்கும் கோயில் என்னும் சொல் அரசன் உறைவிடமாகிய அரண்மனையையும் குறித்தது.

சிலர் புத்தர் காலத்துக்குப் பின்னரே கோயிலும் குறிகளும் உண்டாயின, அவர் காலத்திற்குமுன் அவை இல்லை என ஆராய்ச்சியிலராய் வாதிப்பர். புத்தர் காலத்துக்கு முற்பட்ட காலத்தவராகிய ஆசிரியர் தொல்காப்பியர் படிமம் என்னும் சொல் கூறியிருத்தலாலும், தெய்வங்கட்குப் பகுத்து நிலங்கூறி யிருத்தலாலும், தெய்வம், கடவுள், என்னும்பொருள்இனிது விளங்க உடம்பொடு புணர்த்தி அச்சொற்களால் கூறிச் செல்லுதலாலும் அன்னோர் வாதம் கால்வாதம், பிடிவாத மாகுமேயன்றி உண்மை வாதமாகாது. ஈண்டு எடுத்துக் காட்டிய ஏதுக்களால் கோயில் உண்மை எவ்வாறு பெறப்படும் எனின், படிமம் வைத்துத் தொழுதார் அஃதிருத்தற்குரிய இடமாகிய கோயில் அமைத்திருப்பர் ஆதலாலும், செருவில் இறந்த வீரர்க்கு அவர் வீரத்தை மெச்சி அவரைப்போல் கல்லில் உருவம் அமைத்து அவர் பெயரும் அவர் வீரச்செய்கையும் அதனுள் ஒரு பகுதியில் பொறித்து அதனை நடுதல் உண்டு என்னும் வழக்கத்தை ஆசிரியர் தொல்காப்பியர் கூறியிருத்தலின் வீரர்க்கு இத்துணைச் சிறப்புச் செய்த நாகரிகத் தமிழர் கடவுட்குக் கோயில் அமையாதிரார் ஆதலாலும் அஞ்ஞான்றும் கோயிலும் குறிகளும் தமிழர் கொண்டிருந்தனர் என்பதே கோடற்பாற்று. தொல்காப்பியர் காலத்து வீடு கட்டி நல்வாழ்க்கை வாழ்ந்த கடவுட்கொள்கையுடைய தமிழர் தாம் வழிபடும் கடவுட்குக் கோயில்கட்டி வழிபாடாற்றிலர் அல்லர் என்பது இறப்ப இழிந்த மதியினைப் புலப்படுத்துவ தாகும். 'தொல்காப்பியர் கூறவில்லை ஆதலால் கோயில் இருப்பில்லை' என்பார்க்குக் கோயில் இருந்ததில்லை என அவர் (தொல்காப்பியர்) கூறவில்லை. ஆதலால் கோயில் இருந்த துண்மை பெறப்படுகின்றதே எனின் அன்னோர் கூறும் விடையாது ?

அஞ்ஞான்று இருந்ததாயின் இருக்க, இஞ்ஞான்று அவை வேண்டப்படுவன வல்ல, இறைவன் எங்கும் நிறைந்தவன் எனக் கூறுதலின் ஓரிடத்துக் கோயில் செய்து ஆண்டவனை வழிபடின் ஆண்டு அவன் எவ்வாறு இருப்பான் கொல் எனின் ? எல்லா விடத்திலும் நிறைந்திருத்தற்றன்மை அவனுக்கு உண்மையின் நம்மால் வரைந்து கொள்ளப்பட்ட இடத்தில் இருக்கின்றான் ஆதலின் ஓரிடத்துக் கோயில் செய்து வழிபடுதல் பொருந்தும் என்க.

நம்மாற் சுட்டப்பட்ட ஒரு கோயிலில் இறைவன் இருக்கின்றான் எனக் கொண்டோமாயின் சுட்டப்படாத ஏனையிடத்தில் இலனாய் அவனது எங்கும் நிறைதற்றன்மைக்கு (வியாபகத்திற்கு) இழுக்கு நேருமே என்றால், எங்கும் உறைகின்றான் என நாம் கொண்டுள்ளோம் ஆதலின் நம்மாற்

சுட்டப்படாத இடங்களிலும் அவன் இருக்கின்றானாதலின் இழுக்கில்லை என்க. அவ்வாறாயின் கோயிலிலும் ஏனையிடங்களிலும் இறைவன் இருக்கின்றானாயின் கோயில் எற்றுக்கு? அவற்றுள்ளும் சில கோயில்கள் மிகச் சிறப்புடையன என்று கூறுதல் எற்றுக்கு? இவ்வாறு கூறுதல் வழுவாகாதோ எனின், நமதுடலில் எங்கேனும் ஓரிடத்து நலமேனும், கெடுதலேனும் நேரின் அவ்வாயிலாய் உயிர் இன்ப துன்பங்களை நுகர்கின்றது. ஆதலின் உயிர் உடலுள் எவ்விடத்திலும் வியாபகமாய் நிற்கின்றதென்பதனை அறிகின்றோம். என்றாலும் சில இடத்தில் உயிரின் வியாபகம் மிகுந்திருக்கின்றதென்பது உடல் நூல் வல்லார் ஆராய்ந்து கூறுகின்றார் ஆதலின் அது போல இறைவன் வியாபகம் எங்கும் உள்ளதெனினும் திருக்கோயில்களில் சிறந்துள்ளதென்க. ஆதலால் கோயில்கள் இன்றியமையாதவன்றும் வேண்டப்படுவனவே; போற்றப்படுவனவே.

---

# ஒழுக்கம்

[C. S. சுவாமிநாத முதலியார்]

ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்—திருவள்ளுவர்.

உயிரினுக் குயிராகியும் கண்டவிடமெல்லாம் நீக்கமற நிறைந்தும் இருக்கும் பரம்பொருளாகிய கடவுளை நாம் வழிபடுகிறோம். அவ்வழிபாட்டின் பகுதிகளைப் பற்றியும் நம் வாழ்க்கையில் அவ்வழிபாட்டின் பலன் யாது என்பதைப்பற்றியும் ஆராய்வது ஒழுக்கத்தைப் பற்றிப் பேசும்போது அவசியமாகிறது.

கடவுள் உருவத்துக்குத் தேங்காய், பழம், புஷ்பம் இவைகளை அர்ப்பணம் செய்கிறோம். இதைக் கடவுள் வழிபாடாகக் கொள்கிறோம். இது ஒரு பக்கம் இருக்க, இதைக் குறைவாகக் கொள்ளாமலேயே, வேறு ஒரு வழிபாடு வேறு மாதிரியான அர்ப்பணம் நாம் முக்கியமாய்ச் செய்ய வேண்டிய தவசியமாகிறது. மனம், வாக்கு, காயத்தால் எண்ணத்தையும், பேச்சையும், செய்கையையும் நாம் அர்ப்பணம் செய்து கடவுளை வழிபட வேண்டியது இன்றியமையாத பூஜையாகும்.

கடவுளை மனதால் தியானம் செய்யலாம். அவருடைய அழகிய குணங்களைப்பற்றியும் மனதால் நினைத்து நம்மனதுக்கு ஏற்றவாறு மானச பூஜை செய்யலாம். மந்திரங்களை உச்சரித்து பூஜிக்கலாம். பல தோத்திரப் பாக்களை வாயால் சொல்லிக் கேட்பவர் மனமும் சொல்பவர் மனமும் உருகும் வண்ணம் வாக்கால் கடவுள் வழிபாடு செய்யலாம், கையால் புஷ்பங்களை எடுத்துச் சாத்தி அர்ச்சனை முதலியவை செய்து கடவுள் உருவத்துக்கு நம்தேக அவயவங்களை உபயோகித்துப் பூஜை நடத்தலாம். கோயிற் பிரகாரங்களில் சுற்றி வந்தும் தேகத்தாலான வழிபாடு செய்யலாம். பஜனை காலத்தில் ஓடி ஆடி குதித்து பக்தி பரவசத்தில் தேகத்தால் ஈஸ்வர

சேவை செய்யலாம். மேற்சொன்ன மனவாக்குக் காயத்தால் செய்யும் வழிபாடு ஒரு பக்கம் இருக்க, அதைக் குறைவாகக் கொள்ளாமலேயே நாம் நடத்தக்கூடிய முக்கிய வழிபாடு அத்தியாவசியமானது ஒன்று இருக்கிறது. அந்த பூஜா விதியைப்பற்றித் தான் நான் வற்புறுத்தத் துணிகிறேன். அதைக் கொஞ்சம் கவனிப்போம்.

காலையில் தூக்கத்திலிருந்து விழித்தது முதல் நாள் முழுவதும் - இரவில் உறங்கப் போகும் வரையில் நாம் அளவற்ற எண்ணங்களை எண்ணுகிறோம்; பேச்சுகளைப் பேசுகிறோம். நானாவித செய்கைகளைச் செய்கிறோம். கடவுள் வழிபாட்டுக்கும் இவைகளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? மேலே சொன்ன வழிபாடுதான் நாம் கடவுள் பூஜையாகக் கொள்ள வேண்டியதே யொழிய மற்றைய வெல்லாம் உலக சம்பந்தமான காரியங்கள். சாதாரண வாழ்க்கையில் பலவிதமான எண்ணங்களும், வார்த்தைகளும், செயல்களும்நடைபெறும். அவைகளெல்லாம் மதசம்பந்தமானவையாக வாவது அல்லது ஆத்ம ஞான முறையில் சேர்ந்தவையாக வாவது கொள்ளுதல் தவறாதா? மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் எப்படி முடி போடுவது? ஆத்மஞான நெறியும் லௌகிக முறையும் வேறல்லவா?

இந்தக் கேள்விகளைச்சற்று உன்னிப் பார்க்க வேண்டிய அவசியம். ஏனென்றால் உலகத்தில் மக்கள் லௌகிகத் தொழில்களில் அநேகமாய் அவர்கள் காலம் முழுவதையும் செலவழிக்கிறார்கள். அவைகளைத் தவிர கடவுள்வழிபாட்டுக்கும் ஞான நெறிப் பயிற்சிக்காக வென்றும் கொஞ்சம் கூட தங்கள் காலத்தைச் செலவழிக்க முடியாமலே ஆயிரத்தில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மர் வாழ்நாட்களைக் கழித்து வருகிறார்கள். அவர்கள் நற்கதிக்கு மார்க்கமேயில்லாமல் ஜன்மத்தை வீணே கழித்து மரணத்தை யடைய வேண்டியவர்களாகிறார்கள். சிலருக்குக் கால அநுகூலமிருந்தும் ஊக்கமில்லாமையினால், ஆத்ம ஞானப்பயிற்சியிலும் கடவுள் வழிபாட்டிலும் அன்னார் கவனம் செலுத்தாமலிருக்கலாம். அநேகருக்கு வயிறு வளர்க்கும் தொழில்களில் படும் கஷ்டத்தாலும் வேலை மிகுதியாலும் வேறு ஒன்றையும் செய்யக் காலமும் இல்லை; சிந்திக்கத் தோன்றுகிறதுமில்லை என்றும் சொல்லலாம். இவர்களுக்கு என்ன கதி? கடவுளை வழிபட்டு மேலான ஆனந்தத்தை யடைய பாக்கியமில்லாமலே இவர்கள் வீணான வாழ்க்கையில் இருப்பது பரமபிதாவாகிய கடவுள் ஆஞ்ஞைக்குள்பட்டு நிற்கும் இப்பிரபஞ்சத்தில் அநியாயமல்லவா? அந்தோ! இது கொடுமையினும் கொடுமை! ஆலோசனை செய்பவர்களுக்கு இந்த நிலைமை துக்கத்தை உண்டுபண்ணுகிறது. தீர்க்க ஆலோசனை பண்ணினால் இந்த துக்கம் நீங்கும்; வழி ஏற்படும் என்பது திண்ணம். சற்று ஆராய்வாம்.

உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களிலும், பிராணிகளிலும், மனிதர்களிடத்தும் கடவுள் இருக்கின்றார். நம்முடைய புலன்களால் அறியக் கூடிய தூல உருவத்துள்ளே அருவமாய் உயிரினுக்குள் உயிராய் அவர் நிற்கின்றார். விகாச முறையில் படிப்படியாய் அவர் சக்தி, அவர் ஒளி வெளியாகிறது. ஒரு ஆலம் வித்தில் பெருமை

வாய்ந்த அழகான பரோபகாரமான ஆலமரம் இருக்கின்றது. முதலில் சிறுமையான, பார்ப்பதற்குக் கொஞ்சமும் அழகில்லாத, உபயோகமற்றது போல் தோன்றுகிற வித்துதான் காணப்படுகிறது. உண்மையில் அதற்குள்ளிருக்கும் கம்பீரமான விருக்ஷம் நமக்குப் புலப்படுகிறதில்லை. பூமியில் போடப்பட்டு உள்ளேயிருக்கும் சக்தி வெளிவர அநுகூலங்கள் வாய்த்தவுடன் வித்திலிருந்து மரம் வளருகிறது. இம்மாதிரியே கடவுளுடைய அபார சக்தியும், அழகும், அன்பும், இன்பமும், கல், மண் முதலிய லோக வர்க்கத்திலும், செடி, கொடி, மரம் முதலிய வர்க்கத்திலும், பட்சி, மிருகம் முதலிய வர்க்கத்திலும், மானிட வர்க்கத்திலும் தூங்கிக் கொண்டிருக்கின்றன. நாளடைவில் படிப்படியாய் அவை ஒரு விகாசமாகும். அதாவது கடவுட்டன்மையை ஒவ்வொரு வஸ்துவும், பிராணியும் (செடி, கொடி, மரத்தையும் பிராணியென்றே கூறலாம்) மனிதனும் அடையலாம். ஆலம் வித்தின் முடிவு ஆலமரமே. உள்ளடங்கியிருப்பது வெளியாகிக் கூர்தலே இயற்கையில் நாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் காணக்கூடியது. அறிவியல் வழியில் உழைத்து மேனாட்டுக் கலைஞர்கள் கண்டு பிடித்திருக்கும் முறையும் அதுவே. கல்லினின்று மலைகள் நாளடைவில் வளர்ந்திருப்பதாகத் தெரிகிறது. சாதாரண புஷ்பச்செடிகளிலிருந்து இன்னும் விநோதமான அழகு வாய்ந்த புஷ்பச் செடிகள் நாளடைவில் உற்பத்தியாகின்றன. மிருக, பட்சி வர்க்கங்களிலும் ஒரு வகுப்பிலிருந்து மேலான வகுப்பு உற்பத்தியாகிறது. இவ்விஷயங்களைப் பரிசோதனை செய்து இயற்கையின் ஒவ்வொரு வகுப்பிலும் தேர்ந்த அறிவியற் கலைஞர்கள் எழுதியிருக்கும் புத்தகங்களை வாசித்துப் பார்த்தால் நமக்கு இயற்கை மாதாவின் விசித்திர நுட்பமான வேலை புலப்படும். படிப்பில்லாவிடினும் இயற்கையைக் கண்டுகளிக்கும் வழக்கம் நமக்கு இருப்பின், உண்மையை நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். கடவுள் முறையை நாம் அறிய இயற்கையென்னும் விலையில்லாப் புத்தகம் ஒன்றே போதும்.

ஆலமரத்தின் சக்தியும், அழகும், அன்பும், சுகமும், விதையில் இருந்ததனாலன்றோ பின்பு வெளியாயிற்று. அம்மாதிரி விகாசமாவது அதன் தர்மம்; கடவுள் நோக்கம். அதுபோல இப்பிரபஞ்சத்தில் கடவுளின் பெருநோக்கம் யாது? ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு சீவனிலும்தான் வெளியாக வேண்டியதுதான். அதாவது நாளடைவில் கடவுட்டன்மை வெளியாக வேண்டியது. அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு இடர்செய்யும் மலங்கள் குறைந்தால் சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கும். சீவன் கடவுட்டன்மையை அடைவதால் கடவுளுடன் இரண்டறக் கலந்து நிற்கின்றான். கடவுளாக ஆகின்றான் என்பதுகூட தவறாகாது. கடவுளுக்கும் தனக்கும் இசைந்த பொருத்தத்தைப்பற்றிப் பேசும்போது "உன்னோடென்னை வேறென் றெண்ணின் மிகவும் பணிக்குதே" என்றும் "சிருட்டி முதலோரைந்து தொழிலுஞ்செய் யென் றென்னையே செல்வப் பிள்ளையாக்கி வளர்க்கின்றாயி தென்னையே" என்றும் "நானும் நீயும் ஒன்றென் றுரைத்து நல்கு ஜோதியே" என்றும் வடலூர் இராமலிங்க சுவாமிகள் கூறியிருப்பது இங்கே கவனிக்கற்பாலது.

நான் சித்தாந்த, மாயாவாத, அத்வைத சச்சரவில் நுழையவில்லை. அத்வைதிகள் சொல்லும் முறையில் ஏற்கனவே சீவனும் சிவனும் ஒன்று. வேறு என்று மாயையால் நாம் பிரமிக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. சீவனுக்குள் சிவ வித்து உறங்கிக் கொண்டிருந்தது. இப்போது விகாச முறையில் படிப்படியாய் சீவனுடைய மலங்கள் நீங்க நீங்க, வித்து மரமாக வளர்ந்து விட்டது. சிவனும் சீவனும் ஒன்றுபட்டன என்பதே. இது இயற்கை மதம். வைதீக சைவ சித்தாந்திகளின் தொன்றுதொட்டு வழங்கும் கொள்கைக்கு இம்மாதிரி கூறுவது முரணு யிருக்கலாமோ என்னவோ? அப்படியாயின் பெரியோர் என்னை மன்னிக்க வேண்டியதுதான். என்னுடைய சிற்றறிவுக்கு எட்டிய மட்டும் சித்தாந்தம் இயற்கை மதம். இயற்கை மாதா கூறுவதைத் தான் அது சாத்திர வாயிலாகக் கூறுகின்றது. பிரபஞ் சத்தில் மேற்சொன்ன விகாசமுறை கடவுள் ஆஞ்ஞையாயின், உண்மையான கடவுள்வழிபாடு யாது? அவர் நோக்கத்துக்குரிய வழியிலிருந்து நடப்பதே. இராமலிங்க சுவாமிகள் இதைத்தான் சாதித்தார் என்பது பின்வரும் அடிகளால் விளங்கும்:—

"என்னுடைசை யெல்லாந் தன்னருள்
வடிவந் தனக்கே
எய்திடச் செய்திட்டருளி யென்னையு
முடனி ருத்தித்
தன்னுடைசை யெல்லா மென்னுள்
ளகத்தே வைத்துத்
தானு முடனிருந் தருளிக் கலந்த
பெருந்தகையே."

கடவுள் நோக்கமே எல்லாரிடத்திலும் நிறைவேறுவதற்கு அநுகூலமான வழியில் நாம் செல்ல வேண்டும். அது தான் உண்மையான கடவுள் பூஜையாகும். இந்த பூஜையைச் செய்கிறவர்கள் தான் உண்மையான பக்தர்கள். கடவுட்டன்மை சாதாரண மக்களிடம் உறங்கிக் கொண்டிருக்கிறது. இவர்களிடத்துப் பிரகாசிக்கும், கடவுளை எவ்வுயிரினிடத்தும் இவர்கள் பார்ப்பார்கள். உண்மையில் இவர்களே பார்ப்பனர்கள் என்ற பெயரைக் கொள்ளலாம். மறுபடியும் இராமலிங்க சுவாமிகள் சொல்வதைக் கவனிப்போம்:—

"எத்துணையும் பேதமுறா தெவ் வுயிருந்
தம்முயிர் போலெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடைய வராயுவக் கின்றார்
யாவரவ ருளந்தான் சுத்த
சித்துருவா யெம் பெருமா னடம்
புரியு மிடம்"

நாம் நம்முடைய பல வேலைகளைப் பார்க்குங் காலத்து அநேக பிராணிகளின் சம்பந்தமும் அநேக மனிதர்களின் சம்பந்தமும் ஏற்படுகின்றன. அநேக செய்கைகளைச் செய்கிறோம். வார்த்தைகளைப் பேசுகிறோம். எண்ணங்களை எண்ணுகிறோம். அப்பொதெல்லாம் அந்தப் பிராணிகளுக்குள்ளேயும், மனிதர்களுக்குள்ளேயும், அந்தர்யாமியாய்க் கடவுள் இருக்கிறார் என்பதையும், 'கடவுட்டன்மை விகாசமாகப் போகிறதென்பதையும் நாம் இடைவிடாமல் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நம்மிடத்திலும் அம்மாதிரியே யென்பதும் சதா நம் மனத்தில் தவறாமல் ஞாபகமிருக்க வேண்டும். ஏற்கனவே நான் கடவுட்டன்மையின் முக்கிய அம்சங்கள் இன்னவையென்று கூறியுள்ளேன். சக்தி, அழகு, அன்பு, இன்பம் எல்லா நல்ல குணங்களும் இவைகளில் அடங்கும். நாம் இவற்றை நம் செய்கையிலும், பேச்சிலும், எண்ணத்திலும் மேலும் மேலும் வளர்க்க

வேண்டும். பிறரிடத்திலும் இவைகள் வளர வேண்டியதற்காக நம்மால் இயன்ற பிரயத்தனங்களைச் செய்ய வேண்டும். இதுதான் உண்மையான கடவுள்வழிபாடு. இதுதான் சிவபூஜை; இதுதான் நல்லொழுக்கம்.

ஒரு கச்சேரியில் கடிதங்கள் எழுதுவது ஒருவருக்குத் தொழிலாயிருக்கலாம். மற்றொருவருக்குக் கடையில் பல சரக்குகளை விற்கும் தொழிலாயிருக்கலாம். இன்னொருவருக்குக் குற்றவாளிகளை விசாரித்து விடுதலை செய்வதும் தண்டனை விதிப்பதும் தொழிலாயிருக்கலாம். மற்றொருவருக்கு நாற்காலி மேஜை முதலிய மரச்சாமான்களை பண்ணும் தொழிலாயிருக்கலாம். இம்மாதிரி மக்கள் பல்லாயிரக்கணக்கான தொழில்களில் அமர்ந்திருக்கிறார்கள். அந்தந்த வேலையை அவரவர்கள் சரிவர அழகாகச்செய்யவேண்டும். அது நல்லொழுக்கத்துக்கு அடிப்படையான அஸ்திவாரம். நீதிநூலில் ஔவையார் 'அழகலாதன செயேல்' என்று சொல்லியிருக்கின்றார்கள் அல்லவா? ஒழுக்கம் என்றால் சாதாரணமாய்க் கோபம் இல்லாமலிருத்தல், புலால் மறுத்தல் குடி முதலிய தீயவழிகளில் செல்லாமலிருத்தல், பிறரிடத்தில் தயை முதலிய நல்லகுணங்களைக் கடைப்பிடித்தல் என்று அர்த்தம் செய்வது வழக்கம். இவைகளெல்லாம் வேண்டியதுதான்; ஆனால் இவைகள் மாத்திரம் போதாது. எல்லாச்செய்கைகளிலும் பேச்சிலும் எண்ணத்திலும் கடவுள் நோக்கத்துக்கு நேராக அதாவது ஒழுங்காக இருந்தால்தான் அது நல்லொழுக்கமாகும். ஒரு உதாரணம் பார்ப்போம். ஒருவர் உபாத்தியாயத் தொழிலில் அமர்ந்திருக்கிறார். அவருக்குக் கோபம் வருகிறதில்லை. குடி முதலிய தீய பயிற்சிகளும் இல்லை. ஏழைகளிடத்தில் இரக்கம் உண்டு. ஆனால் தன்னிடம் பாடம் கேட்கும் மாணாக்கர்களுக்கு வேண்டியவற்றை தான் நன்றாகக் கற்று அவர்களுக்குப் பயன்படும் முறையில் சிரத்தையுடன் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதில்லை. இவர் செய்து வருவது அழகல்ல. இவரிடத்திலும் மாணாக்கர்களிடத்தும் கடவுட்டன்மை விகாசமாகும் முறையில் இவர் நடந்துகொள்ளவில்லை. எந்த பாடத்தைக் கற்பிக்கிறாரோ அதில் தேர்ச்சியடைந்து தங்கள் சக்திகளை ஓங்கச்செய்து கொள்ள மாணாக்கர்களுக்கு உதவி புரிகிறதில்லை. 'தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்' என்று திருவள்ளுவர் கூறியபடி தாங்கள் கைக்கொண்ட எந்தச் செய்கையையும் செம்மையாக செய்யவேண்டும் என்கிற நல்ல வழக்கம் மாணாக்கர்களுக்கு இந்தஉபாத்தியாயரால் வராது. இவரிடத்தில் ஒழுக்கம் பூரணமாக இல்லை என்பது திண்ணம். மற்றொரு உபாத்தியார் பாடங்களை நன்றாகக் கற்பிக்கலாம். அவர் சொல்லும் பாடத்தில் மாணாக்கர் களுக்கு தேர்ச்சி உண்டாகலாம். ஆனால், அவர் சிடு சிடு என்று சதா கோபித்துக் கொள்ளுபவர். அவர் அருகில் செல்லவே பயப்படுவார்கள். தவறும் மாணாக்கர்களை கோபாவேசமில்லாமலேயே கண்டிக்க வேண்டும் என்பதையும் தவறுதலில்லாத மாணாக்கர்களிடத்து கடுஞ்சொல் உபயோகிப்பது முறையல்ல வென்பதையும் இவர் மறந்தவர். இந்த உபாத்தியாயரிடத்தும் நல்லொழுக்கம் பூரணமாக இல்லை. இம்மாதிரி அநேக உதாரணங்களைக் கூறலாம். விரிக்கிற் பெருகும் என்று அஞ்சி வேறு ஒரு உதாரணம் மட்டும் சொல்லி விடுகிறேன்.

ஒரு வியாபாரி பரோபகாரமான சிந்தையுடையவர். பல தர்ம காரியங்களுக்குப் பொருள் அளிப்பார். ஏழைகளுக்கு அன்னமிடுவார். ஆனால், தன்னிடம் வியாபாரத்துக்கு வரும் மனிதர்களிடம் கடுமையான பேச்சு தான் பேசுவார். பாழான சரக்கை நல்ல சரக்கென்று வர்ணித்து ஏமாற்றுவார். ஒரு ரூபாய்க்கு வாங்கின ஒரு பொருளை நியாயமான இலாபமாக, கூட சுமார் ஒரு அணா சேர்த்து விற்பதற்குப்பதிலாக ஒருரூபாய் இரண்டு அணா கொள்முதல் என்று பொய் சொல்லி ஒரு ரூபாய் மூன்று அணாவை தான் பெற்றுக்கொண்டு விற்பார். பொருளை வாங்குகிறவருக் குள்ளும் தனக்குள்ளும் கடவுள் இருக்கின்றாரே என்கிற ஞாபகம் இவருக்கு இல்லை. கடவுள் சந்நிதியில் தான் பொய் சொல்கிற ஞாபகமும் இல்லை. தான் பேசும் பேச்சும் எண்ணும் எண்ணமும் கடவுளுக்கு அர்ப்பணமாகக் கூடியதாயிருக்க வேண்டும் என்கிற ஞாபகமும் இல்லை. தன்னுடலும் தன்னிடம் வியாபாரத்துக்கு வந்தவர் உடலும் இறைவன் இருப்பிடம், திருக்கோயில் என்கிற ஞாபகமும் இல்லை. சாதாரணமாய் நாம் கோவில்களுக்குள் சென்றால் நமக்கு இறைவன் சந்நிதி என்கிற ஞாபகம் இருக்கிறது. நாம் கோபம், சச்சரவு முதலியவற்றைக் கோவில்களுக்குள் வைத்துக் கொள்கிறதில்லை. ஏதாவது கடுஞ்சொல் பேசநம்மனம் நம்மைத் தூண்டும் சந்தர்ப்பத்தில் நாம் வெளியில் போய் பேசிக்கொள்வோம் என்று நிறுத்தி விடுகிறோம் அல்லவா ? சிலருக்குக் கோவில் என்கிற வித்தியாசமில்லாமல் பேசத் துணிவு வருகிறது. அவர்கள் அபூர்வமான மக்கள். சாதாரணமாய் அம்மாதிரி செய்யாத நாம் நல்லொழுக்கத்திலிருப்பதாக நம்மை நாமே மேம்பட்டவர்களாக நினைத்துக் கொண்டிருக்கிறோம் அல்லவா? அந்தத் திருப்தி மூடத்தனமானது. நாமும் நல்லொழுக்கத்திலில்லை என்றுதான் நான் கூறுவேன்.

கோவிலை விட்டுத் தெருவுக்கு அல்லது நம் இல்லத்துக்குள் போய்ச் சேர்ந்தபின் அங்கே கோபச் சொல், இன்னாச்சொல் முதலிய பேசும் காலத்தில் கடவுள் சந்நிதியில் நாம் இல்லையா? எங்கும் கடவுள் இருக்கிறார், எல்லாரிடத்திலும் எல்லா பிராணிகளுக்குள்ளும் அவர் இருக்கிறார், அவரின்றி அணுவும் அசையாது என்று நம்புகிறோமல்லவா ? இந்த நம்பிக்கை உண்மையானால் அந்த உண்மை நம் மனதில் சதா இருந்தால் பொறுமை, சாந்தம், அழுக்காறின்மை, அகங்காரமின்மை, தயை, அஹிம்சை முதலிய பல நற்குணங்களை தனித்தனி தேடி நாம் பாடுபடவேண்டியதில்லை. அவைகள் தானே வந்து நிலைக்கும். எல்லா நல்ல குணங்களுக்கும் அடிப்படையானதை உறுதிபண்ணிக் கொண்ட பின் அவைகளைப் பற்றி கவலை வேண்டியதில்லையே. வயல்களில் வேலை செய்கிறவர்களாகட்டும், கச்சேரியில் வேலை செய்கிறவர்களாகட்டும், வியாபாரம் செய்கிறவர்களாகட்டும், கோவில்களில் பூஜை முதலிய செய்யும் பூசாரிகளாகட்டும், கைத்தொழிற் சாலைகளில் வேலை செய்கிறவர்களாகட்டும், கக்கூசுகளிலிருந்து அசுத்தத்தை நீக்கும் தொழில் செய்கிறவர்களாகட்டும் மந்திரி வேலையிலிருந்து இராஜாங்க பரிபாலனத் தொழி

விலிருப்பவர் களாகட்டும், தோட்டி முதல் தொண்டைமான்வரை,யாவரும் கடவுள் சந்நிதியில் நின்றுதான் தங் கள் தங்கள் வேலைகளைச் செய்கிற உண்மையை அவர்கள் சதாஞாபகம் வைத்துக் கொள்ளும் பட்சத்தில் நல் லொழுக் கத்திலிருந்து அவர்கள் நழுவ மாட்டார்கள். தங்களிடத்திலும் தங்களோடு சம்பந்தப்பட்டு வரும் பிராணிகள் மனிதர்களிடத்திலும் கட வுள் நோக்கம் நிறைவேற, அதாவது கடவுட்டன்மை ஓங்கி மேலும்மேலும் வளர அநுகூலமான வழிகளில் தான் அவர்கள் செய்கைகளைச் செய்வார்கள், பேச்சுகளைப் பேசுவார்கள், எண்ணங் களை எண்ணுவார்கள். பலவித படிப்பு கள், பாராயணங்கள், பூஜைகள், பிரார்த்தனைகள், அநுட்டானங்கள் எல்லாம் மேற்சொன்ன கடவுள் சாந் நித்ய அப்யாசத்தைப்போல் அவ் வளவு நல்லொழுக்கத்துக்குப் பயன் படா. அவைகளை யெல்லாம் நான் குறைத்துக் கூறினதாக எண்ணக் கூடாது. அவைகளால் பெரும்பயன் விளையும் என்பதற்குச் சந்தேகமில்லை. கடவுளிடத்திலுள்ள நம் பக்தியும், ஞானமும், நற்குணங்களும் அவைகள் மூலமாய்ப் பெருகும் என்பதற்கு ஐய மில்லை. ஆனால் கடவுள் சாந்நித்ய அப் யாசத்தை நமக்குள் நிலைநிறுத்திய பின்பு அவைகள் அவ்வளவு அத்தியா வசியமில்லை.

சதா எக்காலத்திலும் நாள் முழுவ தும் கடவுள் முன்னிலையிலேயே, கட வுளுக்கு அர்ப்பணமாக, கடவுட்டன் மை தன்னிடத்திலும் பிறரிடத்திலும் விளங்கும் வழியில், எல்லாவற்றையும் செய்கிறவன் தன் வேலையைச் செய் யும் காலத்திலேயே நற்சாத்திரம் ஓது கிறான், பூஜை செய்கிறான், பிரார்த் தனை பண்ணுகிறான், தியானம் செய் கிறான், அர்ச்சனை நடாத்துகிறான், உலகத்துக்கு உபந்நியாசமும் செய் கிறான் என்று சொல்வது உண்மையா இல்லையா என்று யோசித்துப் பாருங் கள். அவரவர் காலதேச சௌகரியங் களுக்கும் தேக நிலைமைக்கும் தக்க வாறு சாதாரண பூஜை அநுட்டானங் களை நடத்தவேண்டியதுதான். ஆனால் நான் மேலே வற்புறுத்திய அப்பியா சத்தை எந்தக் காலத்திலும், எந்த இடத்திலும், எந்த நிலைமையிலும், ஒருவிதத் தவறுதலுமின்றி நாம் பயி ற்சி பண்ணி இடைவிடாது நடத்த வேண்டுவது எல்லாவித அப்பியாசங் களை விடவும் அநுட்டானங்களை விடவும் மேலானது. இதுவே கடவுள் வழிபாடு. இதுவே நல்லொழுக்கம், இதுவே முக்திநெறி, அல்லல்ல இது வே முக்தி என்றும் கூறலாம்.

(தொடரும்)


# முருகன் திருவருட்பா

வடலூர் - இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்தது; திருவருட்பாவில் ஐந்தாந் திருமுறையாகத் திகழ்வது. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பேறு குறித்துத் திருத்தணி கையில் முருகப் பெருமான் முன்னிலையில் "அமுத அருகை" இந்நூலில் தேங்கி வழிகிறது. "முருகன் திருவருட்பா" கருங்கல் மனதையுங் கரைத்துக் கரைத்து இளகச் செய்யும் திருவருட்பேற்றில் காதல் எழுப்பும். அதை ஒருகால் ஓதுவோரும் அன்பராதல் ஒருதலை.

விலை அணு 8.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

# சிவஞானபோத விளக்கம்

[உதவிப் பத்திராசிரியர் - கி. குப்புச்சாமி முதலியார்]

### மங்கல வாழ்த்து

அஃதாவது, எல்லா இடையூறுகளையும் நீக்குதற்கு உரியாராகிய விநாயகக் கடவுளை வாழ்த்துகின்ற வாழ்த்து என்பதாம். மெய்கண்டார் தாம் எடுத்த காரியத்திற்கு யாதொரு இடையூறும் வாராது என்று அறிபவராயினும், முன்னோர் சென்றவழியே செல்லுதல் வேண்டுமென்று தம்முடைய மாணுக்கர் அறியும் பொருட்டே இந்த மங்கல வாழ்த்தைக் கூறுகின்றனர்.

"கல்லா னிழல்மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே"

(இதன் பொருள்) கல்ஆல் நிழல் - கல்லால மரத்தின் நிழலினிடத்தே இருந்த, மலைவு - நந்திமா தேவருக்கு இருந்த ஐயத்தினை, இல்லார் - தீர்த்த முதலாசிரியர், அருளிய-பெற்றெடுத்த, பொல்லார்-பொல்லாப் பிள்ளையாரது, இணைமலர் - இரண்டு தாமரைகளாகிய திருவடிகளை, நல்லார்-ஞானிகள், புனைவர் - தங்கள் தலைமீது தரித்துக்கொள்வார்கள். (எ - று.)

மலை வில்லார் - மேருமலையை வில்லாகவுடைய இறைவன் என்றும் பொருள் படுத்துவர். கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்கின்றவற்றை முடித்து ஞானமயமாய் நிற்பவரே விநாயகப் பெருமானது திருவடிகளைத் தமக்குத் தஞ்சமாகக் கொள்வர்; மற்றவர்க்கு அது கூடாது என்பதை இதனால் யறிவித்தனர்.

### அவையடக்கம்

அவையடக்கம் என்னும் இதனையும் முன்னோர் முறையைக்கொண்டு சொல்லப் புகுந்தாராயினும், ஏனைய ஆசிரியர்கள் போன்று, அவையடக்கஞ் சொல்லாது, தம்முடைய சமயமாகிய சைவசமயத்தின் மேலான தகுதியையும், அதன் உட்பொருளையும் இவ்வவையடக்கத்தி னுள்ளேயே விளக்கி ஏனைய சமயத்தவரைத் தாம் பொருட்படுத்துவதில்லை என்பதையும் விளக்கினுர்.

"தம்மை யுணர்ந்து
தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை
யெமையிகழார் - தம்மை
யுணரா ருணராருடங்
கியைந்து தம்மிற்
புணராமை கேளாம்
புறன்"

(இ - ள்.) தம்மை - தம்மியல்பினை, உணர்ந்து - அறிந்து, தமையுடைய - தம்மையுடையானுகிய, தன் - தலைவனுகிய ஆண்டவனை, உணர்வார் - உணர்கின்ற தகுதியுடைய சித்தாந்த சைவர், எம்மை - அவர்களுக்குப் பொருளாகிய எம்மை, உடைமை-உடையவராதலால், எமையிகழார் - அவரது உடைமைப் பொருளாகிய எம்மைக் கொள்ளுவதேயன்றி யிகழ மாட்டார்கள்; (அவ்விதங் கொள்ளுகின்ற சித்தாந்த சைவர் எம்மால் செய்யப்படும் நூலையும் ஒரு பொருளாகக் கொள்வர்) தம்மை யுணரார்-அவ்விதம் தாமொரு பொருள் உண்டென்றும், அப்பொருளை யுடையவனுகிய ஆண்டவன்

ஒருவன் உண்டென்றும் அறியாத சமயத்தவர்கள், உணரார் - எம்முடைய தகுதியை அறியார், (ஏனெனின்) உடங்கு இயைந்து-அவர் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து ஒற்றுமைகொள்ளாது, தம்மிற் புணராமை - ஒருவரோடு ஒருவர் முரண்படுதலாலேயே, புறன்கேளாம்- (அப்புறச் சமயத்தவர் சித்தாந்த சைவராகிய எம்மையும், எம்மால் செய்யப்படுகின்ற இந்நூலையும் இகழ்ந்துஉரைப்பாராயின்) அப்புறங்கூறுதலை யாம் ஒரு பொருளாகக் கொள்ளோம். (எ - று.)

இவ் வவையடக்கம் தாமொரு பொருள் உண்டென்று அறியாத ஆன்மவாதிகள் எல்லோரையும் சித்தாந்த சைவத்திற்குப் புறம்பானவர் என்பதை விளக்கியதாயிற்று.

### பொது வியல்பு

அஃதாவது, இச்சிவஞான போதம் முன் ஆறு சூத்திரங்களைப் பொதுவாகப் பொருள் நிச்சயங் கூறுவதற்குக் கூறினாராதலால், பொது இயல்பு எனப்பட்டது.

### பிரமாண இயல்

பதிபசுபாசமாகிய மூன்று பொருள்களும் உள்ளன என்பதற்கு முதல் மூன்று சூத்திரங்கள் கூறுகின்றார் ஆதலால் அதற்குப் பிரமாண இயல் என்றனர்.

### முதற் சூத்திரம்

மேற்கூறிய வண்ணமே பிரமாண இயலில் முதற்சூத்திரம் கூறுகின்றார்.

"அவனவ ளதுவெனு மவை மூவினைமையிற்
றோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தமாதி யென்மனார் புலவர்"

(இ - ள்.) அவன் - அவனென்றும், அவள் - அவளென்றும், அது - அதுவென்றும், எனும் அவை - கூறுகின்ற இருவிதமாகிய உலகம், மூவினைமையில் - தோன்றுதல், இருத்தல், இறத்தல் என்கின்ற மூன்று தொழில்களையுடையதாதலால், தோற்றிய - தோற்றிய வண்ணமே, திதியே - இருந்து, ஒடுங்கி - தான் தோன்றிய இடத்தில் ஒடுங்கி, மலத்து - ஆணவமலம் நீங்குவதற்கு, உளதாம் - ஒடுங்கிய பொருளினின்றும் உண்டாகும், (இவ்வாறு தோன்றுதலும், இருத்தலும், ஒடுங்கலும் செய்கின்ற கர்த்தாக்களில்) அந்தம் - சங்காரத்தைச் செய்யுங் கடவுளே, ஆதி - முதற் கடவுளாவர், என்மனார் புலவர் - என்று அறிவுடையோர் சொல்வர். (எ-று.)

இச்சூத்திரத்தின் கருத்து சர்வசங்கார காரணனாயிருக்கின்ற முதற்கடவுள் எவரோ அவரே உலகத்துக்கு முதல்வர்; ஏனையோரல்லர் என்பதாம்.

முதலில் பதியுண்டு என்று பொருள் நிச்சயங் கூறுகின்ற இவ்வாசிரியர் அளவை நூல் இலக்கணத்தின்படி அனுமான அளவையால் சொல்லுகின்றார். அளவைகள்: காட்சி, அனுமானம், ஆகமம் என்கிற மூன்றுயினும் எங்கும் நிறைந்த ஆண்டவனைக் காட்சியளவையால் பார்ப்பதற்கேனும், ஆகம அளவையால் அறிந்துகொள்வதற்கேனும் இல்லையாதலால் அனுமான அளவையால் சொல்லுகின்றார். அனுமான அளவையாவது ஒரு காரியத்தைப் பார்த்து இதற்குக் காரணம் எது என்று தெரிந்து கொள்ளுவது. அது எதுபோலெனின், புகையைப் பார்த்த ஒருவன் இவ்வீட்டில் புகை யிருப்பதால் நெருப்பு எரிந்துகொண்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ளுவது ஆகும். இங்குப் பதிப்பொருளாகிய

கடவுள் இல்லை என்பார்க்கும், கடவுள் உண்டு என்பார்க்கும் நிச்சயம் அறிதற்பொருட்டு காணப்படாத கடவுளுக்குக் காணப்பட்ட வுலகத்தைக் கொண்டு அறிவிக்கின்றார். வீட்டினுள் இருக்கின்ற தீயினைத் தான் காணாவிடினும், வெளி வருகின்ற அத்தீயின் காரியமாகிய புகையைக் கண்டு காரணமாகிய தீயை இவ்வீட்டில் உண்டு என்று நிச்சயிப்பதுபோல், இவ்வளவு பெரிய உலகமாகிய காரியத்தைக் கண்ணால் காண்பார்க்கு இக்காரியமாகிய உலகத்துக்கு முதல்வன் ஒருவன் உண்டு; அவனே காரணன்; ஆனால் அம்முதல்வன் எல்லாக் கடவுளர்க்கும் மேலானவன்; அவனே முழுமுதற் கடவுள்; அவன் தொழில் அழித்தலென்னும் தொழில்; அவன் அத்தொழிலைச் செய்யுங்கால், எல்லா உலகங்களும் அவனுள் ஒடுங்கிவிடும்; தோன்றுங்கால் அவனிடத்தே நின்றுந் தோன்றும்; அவனே முழுமுதற் கடவுள் என்று பதியுண்மைக்குப் பிரமாணங் கூறினார்.

இவ்விதம் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டியறியக் கூடியதாகிய பிரபஞ்சந் தோன்றுதலும், இருத்தலும், அழிதலும் உடையதாய் உள்ளது என்பதைச் சந்தேகிக்கின்ற வாதிகளுக்குப் பதில் கூறுவதுபோல்,

"பூதாதி யீறு முதலுந் துணையாகப் [ரோ
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னோதா
வொன் றொன்றிற் றோன்றி யுளதாயிறக்
மன்றென்று முண்டென்ன வாய்ந்து" [கண்டு

என்னும் வெண்பாவைக் கூறினார். இவ்வெண்பாவின் பொருளாவது :—கண்முன் தெரிகின்ற பொருளையும் அறியக் கூடாத வாதிகளா யுள்ளவர்களே! லும்பெரும் பூதங்களையும் முதற்காரணமாகவுடைய இவ்வுலகத்துக்கு அது இருத்தலைக் காணுங்காலத்து இவ்வாறு இருக்கும் உலகம் ஒருகால் தோன்றியும், மற்றொருகால் அழிந்தும் போவதாகிய துணைக்காரணங்களைக் கொண்டு இவ்வுலகம் உள்ளது என்பது அறிதல் கூடும் என்று கூறினார். அவ்விதங் கூறுதலும் ஒன்று தோன்றுவதும் ஒன்று இருப்பதும் ஒன்று அழிவதும் ஆகிய செயலைக் காண்கின்றோமே யன்றி ஒரு காலத்திலேயே எல்லாம் அழிந்து போவதைக் காண்பதில்லை யென்பார்க்கு, அவ்விதமன்று; ஒவ்வொருபொருள் ஒவ்வொரு காலத்தில் ஒன்றாகத் தோன்றி ஒன்றாக இருந்து ஒன்றாக அழிந்து போதலையுங் காண்கின்றோமன்றோ! அதுபோல் இவ்வுலகமும் தோன்றுதலும், இருத்தலும், அழிதலும் ஆகிய மூன்று தொழிலையு முடையது என்று விளக்கிக் காட்டினார். இவ்வாறு கூறுவதைக் கேட்ட சில வாதிகள் இயல்பாகவே தோற்றம் முதலாகிய முத்தொழிலும் உண்டு; இதை யுண்டு பண்ணுகின்ற கடவுள் ஒருவன் வேண்டுவதில்லை என்றனர். அவர்க்குப் பதிலாக, ஒரு குடத்தைக் கண்ட ஒருவன் அக்குடத்தைச் செய்வதற்கு ஒரு குயவன் இருந்திருத்தல் வேண்டும் என்பதே போதிய உதாரணமாகும் என்று கூறினார். அதைக் கேட்ட மற்றொரு வாதி, அவ்விதமே கருத்தா ஒருவன் இருக்கட்டும்; அக்கருத்தா திதிகருத்தாவாக இருத்தல் வேண்டுமன்றிச் சங்கார கருத்தாவாக இருத்தல் கூடாது என்றனன். அதற்கு,

"இலயித்த தன்னி லிலயித்ததா மலத்தா
லிலயித்தவா றுளதா வேண்டும்—இலயித்த

தத்திதியி லென்னி னழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு.''

என்ற வெண்பாவைக் கூறினர். இதற்குப் பொருளாவது :—உலகம் எக் காலத்தும் உள்ள நித்தியப் பொருளாயினும், அது ஒடுங்குங் காலத்து சங்கார கருத்தாவினிடத்திலேயே ஒடுங்குதல் வேண்டும். அவ்வாறல்லாமல் காப்புக் கடவுளிடத்தில் ஒடுங்கு மென்றால் அவ்வுலகமே அழிந்திருத்தல் கூடாது. ஆதலால் உலகம் ஒடுங்குவதும் தோன்றுவதும் இருப்பதும் எல்லாவற்றிற்குங் காரணமாய் சங்காரகருத்தாவே யுள்ளான் என்று கூறினர்.

அதுகேட்ட சில வாதிகள் சங்கார கருத்தா நிமித்த காரணனென்று நீரே கூறுவதால் முதற் காரணமாய் உள்ள ஒரு பொருள் இருத்தல் வேண்டும். அப்பொருளே உலகம் தோன்றுவதற்கும் இருத்தற்கும் இடமாகும் என்றனர். அதற்குப் பதில் கூறுவார் போன்று,

'' வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன் றாணிற்ற லவர்வினையால்
—வித்தகமாம்
வேட்டுவனு மப்புழுப்போல் வேண்டு
ருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து ''

என்னும் வெண்பாவை யருளினர். இதற்குப் பொருளாவது : உலகம் மாயை யென்கின்ற முதற் காரணத்துள் தோன்றுவதாயினும், அம்மாயை இறைவனது செயலில்லாது ஒன்றுஞ் செய்வதற்கு இல்லை யென்றும், மாயையும் உலகமும் விதையும் முளையும் போல் உள்ளன வென்றும், விதை முளைப்பதற்கு ஆதாரமாகிய நிலம் குளிர்ந்த இடத்தேயே வித்தில் உள்ள முளை மேல் வருவதுபோல் அம் மாயையும் தனக்கு ஆதாரமாக நின்று உண்டுபண்ணும் ஆண்டவனது சிற்சத்தியின் கண் அடங்கி நிற்பதால், அந்த சத்தியானவள் திருவுள்ளங் கொண்டவிடத்து அவ்வவ்வுயிரினது வினைக்குத் தகுதியாக அந்தந்த காரியங்களை அந்தந்த இயல்பை மாறுபடாது உண்டாக்கும் தகுதியுடையது ஆம். அச்சத்தியில்லாவிடில் ஒன்றும் நடத்தற்கில்லையாம். ஆதலால் முதற் காரணமாகிய மாயையும், அம்மாயையால் உண்டாகிய உலகமும், ஆண்டவனதுசிற்சத்தியில் ஒடுங்கிமீளத்தோன்றுவனவாம். இதைக் கேட்ட வாதிகள் நிமித்த காரணனாகிய உங்கள் இறைவன் இவ்விதம் முத்தொழிலுஞ் செய்யுங்காலத்து அந்தந்த தொழிலுக்கு ஏற்றவிதமாக வேறுபாட்டை யடைவானோ, அதில் கட்டுப்படுவானோ என்று வினவினர். அதற்குப் பதில் கூறுவது போன்று,

'' நோக்காது நோக்கி
நொடித்தன்றே காலத்திற்
றோக்காது நின்றுளத்தில்
கண்டிறைவ—னாக்காதே
கண்ட நனவுணர்விற்
கண்ட கனவுணரக்
கண்டவனி விற்றின்றாங் கட்டு ''

என்னும் வெண்பாவை மொழிந்தனர். இதற்குப் பொருள் : கடவுளைக் குயவனைப்போல் நிமித்தகாரணன் என்று உவமை கூறினும், குயவனைப் போல் கைகால்முதலிய கரணங்களால் அவன் உலகத்தைப் படையாது திருவுள்ளத்தில் நினைத்த மாத்திரத்து உலகத்தை யுண்டு பண்ணுதலும், அவ்விதமே காத்தலும், அவ்விதமே அழித்தலும் செய்கின்றான். ஆதலால் அவனுக்கு

யாதொரு வேறுபாடும் முத்தொழில்களைச் செய்யுங்காலத்து உண்டாவது இல்லை யென்பதாம்.

இது கேட்ட வாதி பல உலகங்கள் இருப்பனபோல, சங்காரமும் சங்கார கருத்தாவும் பல இருத்தல் வேண்டும் என்றனன். அதற்கு,

" ஒன்றலா வொன்ற லுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றி லவை யீறாத-லொன்ற
வீறேமுத லதனி னீறலா வொன்றுபல [லா
வாறே தொழும்பாகு மங்கு "

என்னும் வெண்பாவை யருளினர். இதற்குப் பொருள் : தேர் முதலாகிய பெரிய பொருள்களைப் பல வேலைக்காரர்கள் ஒன்று சேர்ந்து செய்வதாயினும், அவ்வேலைக்காரர்களுக்கெல்லாந் தலைவனுயுள்ள வொருவன் சொல்லுகின்றபடி செய்து எல்லாக் காரியங்களையும் செய்து முடிக்கின்றார்களாதலால், அது போலவே இறைவனும் எல்லாத் தொழிற் கருத்தாக்களுக்கும் முதல்வனுக நின்று உலகத்தை நடத்துகின்றான். ஆதலால் அவனே முழுமுதற் கடவுள்; உலகம் முழுமுதற் கடவுளாகிய அவனையே ஆதாரமாகக் கொண்டு உடையது என்று காணப் பட்ட உலகத்தைக் கொண்டு காணப் படாத கடவுளை உண்டு என்று பதியுண்மைக்குப் பிரமாணங் கூறினர் என் பதாம்.

இச்சிவஞானபோதத்திற்குத் தெளிபொருள் விளக்கவுரை யென்று எழுதிய வேதாந்தி யொருவர், இச்சூத்திரத்திலுள்ள 'மலத்துளதாம்' என்பதற்குக் கன்ம மலமென்றும், கடவுள் உலகத்திற்கு நிமித்த காரணனுயிருப்பதுபோல் முதற்காரணனுயுமிருக்கின்றான் என்பது 'அந்தமாதி' என்பதனுல் அறிகின்றோம் என்றும், கடவுளை நிமித்த காரணத்திற்கும் முதற் காரணத்திற்கும் உரியவன் என்று கொள்ளாதார் மதம் அவசித்தாந்தம் என்றும் கூறுகின்றனர். இவ் வேகான்ம வாதத்தை எம்மனோராகிய சித்தாந்திகள் கண்டு மயங்காரென்பது எமது துணிபு.

**முதற்சூத்திரம் முடிந்தது**

---

## மதிப்புரை

**சிவாலய நித்திய பூஜாவிதி** என்னும் **ஸ்ரீ பரார்த்த நித்திய பூஜாவிதி** :—இந்நூல் ஸ்ரீ அகோர சிவாசாரியாரால் எழுதப்பெற்றது. கிரந்தத்திலும் தமிழிலும் இந்நூலை தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தினர் தனித்தனியே வெளியிட்டுள்ளார்கள். தனிப்பிரதி விலை ரூ. ஒன்று. இந்நூலின்கண் சிவாலயத்தில் உஷக்கால பூஜை முதல் அர்த்தஜாம பூஜைவரை மூலத்தான இலிங்கமூர்த்திக்கும் ஏனைய பரிவார தேவதைகட்கும் தினந்தோறும் நடக்கும் பூஜைமுறை, விதி, மந்திரங்கள் முதலியனவும், பிரதோஷ காலபூஜை முறை விதிகளும் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலை ஒவ்வொருவரும் பயின்றால் நித்திய பூஜை முறையில் சைவசித்தாந்த சாத்திர உண்மைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதும், தொண்ணூற்றாறு தத்துவங்களையும் எவ்வாறு பூஜை முறையைக் கவனித்தே ஆலயந்தொறும் மக்கள் உணரக்கூடும் என்பதும் நன்கு புலனுகும். ஆலயத்தை இகழ்வோர் இந்நூலைப் பயின்றால் உண்மையை அறியக்கூடும். ஒவ்வொரு சைவரும் இந்நூலை வாங்கிப் பயன் பெறுக.

பொருள்பற்றியும், தஞ்சை திரு. பாபண்ணராவ் அவர்கள் 'தமிழ்வளம்' என்பது பற்றியும் மிகவும் அரிய பொருள் பல செறிந்த சொற்பொழிவுகள் செய்தனர். பின் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் 'தமிழ்ப் பெரியார்' ஆகிய அப்பாடிகளின் அளவிடற்கரிய பெருமைகளை ஆழ்ந்த கருத்து விளங்கப் பெருக்கிப் பேசுவாராயினர். பின் எண்கண் திரு வேங்கடாசல முதலியாரவர்கள் 'தமிழரும் தமிழரின் வழிபாட்டு முறைகளும்' என்பதுபற்றிப் பண்டைப் பழக்க வழக்கங்களை விரித்துச் சுவை ததும்பச் சொற்பொழிவாற்றினர். முடிவாக திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் 'விண்ணப்பம்' ஒன்று அச்சிட்டிருந்ததை மிக மனவெழுச்சியுடன் விளக்கிப் பத்திச் சுவைகனி சொட்டச் சொட்டப் பேசியதின் பயனாக யாவரும் அன்புடன் காசு நல்குவாராயினர்.

அவ்விண்ணப்பத்திற் கிசைய ஆங்கு கூட்டத்தைச் சிறப்பித்த திருவையாற்றுக் கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் அதிற்குறித்துள்ள முதற் புத்தகமாகிய ஞானபரண விளக்கம் என்னும் சிவஞான சித்தியார் உரையைத் தமது ஆதீனச் செலவில் அச்சிட ஒப்பினர். பலர் நன்கொடைப் புத்தகத்தில் கையொப்பமிட்டருள் வாராயினர். அன்று காலையில் நிகழ்ந்த தலைவரின் பல அரிய குறிப்புரைகளுள் கும்பாபிஷேகத்தின் உட்பொருள் பெரிதும் பயன்பட்டதாய், எளிதில் விளங்குவதாய், யாவராலும் போற்றப் பட்டதாயிருந்தது.

அன்று மாலை முன்னதாக இளைஞர் கூட்டம் ஒன்று நடைபெறுவதாயிற்று. அதற்குத் தலைமை தாங்கியவர் திரு. நாராயணசாமி நாயுடு ஆவர். திருவளர் செல்வர்களாகிய மறை திருநாவுக்கரசு, குஞ்சித பாதம், முத்தையா தேசிகர் முதலிய இளைஞர்கள் ஆர்வத்துடன் பேசிய பின்னர், "இவ்வாண்டில் கடந்த திங்கள்கள் ஒழியவரும் ஆறு திங்களிலும் சமாஜம் வெளியிடும் எளிய விலையுள்ள தேவாரம் முதலியனவற்றை விற்றலும், சமாஜத்திற்கு உறுப்பினர்கள் சேர்த்தலும், நாட்டுப்புறங்களில் தொண்டாற்றலுமாகிய தொண்டுகளை விரைந்து செய்யுமாறு இக்கூட்டம் சைவ இளைஞர்களைக் கேட்டுக் கொள்கின்றது" என்ற தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகலில் மீண்டும் மகாநாடு கூடிற்று, முதலாவதாக "சிவ நேசன்" ஆசிரியராய இராமசாமிச் செட்டியார் அவர்கள் 'திருவருட் செல்வம்' என்பதுபற்றிப் பேசி உலகச் செல்வம் நிலையாத தொன்றென்பதையும் திருவருட் செல்வமே நிலை பெற்றதென்பதையும் பல கேள்விகளுடன் தெளிவுற விளக்கினர். பின் சைவத் திரு சிதம்பர சுவாமிகள் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று நமது கடமை விளங்க விரிவுரை நிகழ்த்தினர். அவர்கள் இன்னிசையுடன் எடுத்துக் காட்டிய மேற்கோள்களும், சிவம் பெருக்கும் நல்லறிவை வளர்க்கப் பேசிய பேச்சும் அன்பர் உள்ளத்தில் ஊடுருவிற்று. அதன்பின் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் 'குறிகளும், அடையாளமுங் கோயிலும்' என்றெடுத்து திருநீறு, உருத்திராக்கம், சிவலிங்கம், நந்தி, பலிபீடம் முதலியவற்றின் உட்பொருள்களை விரிவாக விளங்க வைத்தனர். முடிவாக, சைவத்திரு கருணாலய சுவாமிகள் 'தொண்டரொடு கூட்டு கண்டாய்' என்றெடுத்துக் கொண்டு தொண்டர் யாரென்றும் அவரொடு கூடுவதனாலாய பயன் இன்ன தென்றும் யாவரும் அறிந்து கொள்ளும்படி விரித்துரைத்தனர். வழக்கம் போல் தலைவர் கருத்துரை, திருமுறை ஓதல் முதலியவற்றுடன் கூட்டங் கலைந்தது. அன்றிரவு இறைவன் திருவுலாக்காட்சி, கண்டுகளிக்க வேண்டியவற்றுள் தலை சிறந்த தொன்றாக விளங்கிற்று.

மறுநாட்காலை வடிவீச்சரம் திரு. ரா. பதுமநாபப்பிள்ளை அவர்கள் 'அப்பர் தேவாரம்' என்னும் பொருள்பற்றி அடிகளின் பல பாடல்களின் உட்கருத்துக்களையும், அன்னார் தேவாரத்தைப் பரப்பும் முறையையும், திருக்குறுந் தொகையிலிருந்து ஆய்ந் தெடுக்கப்பட்ட பல மேற்கோள்களுடன் இனிது விளக்கினர். பின் தலைவரவர்கள் 'திருவாசகம்' என்னும் பொருள் பற்றி அப்பெயர் வந்த வகையையும் அதன் அமிழ்தினுமினிய சுவையையும் கேட்டார் விரும்பும்படி விளக்கினர்.

அதன்பின் சைவத் திரு. பொன்னம்பல சிவம் திருப்பணிச் செல்வர்களாய பழ. செ. இலட்சுமண செட்டியார், பழனியப்ப செட்டியார் இவர்கள்மேல் மூன்று வாழ்த்துக் கவிகள் பாடி அவற்றின் பொருளை அவர்கள் முன்னிலையில் இனிமையுடன் எடுத்துரைத்தனர். இது முடிந்ததும் ஆலங்குடி மாகாணத்துள்ள வேடம்பூர் வாசிகள் இச்சமாஜ சார்பாக ஷெ திருப்பணியாளர்களுக்கு நன்றி கூறற் றுள் வழங்கி மாலை சூட்டுவாராயினர். அவர்கள் எதிர் நன்றி கூறிச் சென்றபின் தலைவர் பின்னுரை நிகழ்ந்தது. அதன்பின் மறை. திருநாவுக்கரசரால் மகாநாடு கூடுதற்கு அடிப்படையாக வேண்டிய விடங்களை விருப்புடன் ஈந்து பல தொண்டாற்றிய திரு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கட்கும், பெரும்பொருள் உதவியும், ஆள்வினை வழங்கியும், பெரும்புகழ் கொண்ட வேடம்பூர் வாசிகளுக்கும், அரும்பொரு

ளுதவிய தஞ்சை வாசிகளுக்கும், தஞ்சையிலிருந்து வந்துதவிய சாரணர்களுக்கும், இன்னிசை யாளர்களுக்கும், சொன்மாரி பொழிந்து மகாநாட்டைச் சிறப்பித்த அருஞ் சொற்பொழிவாளர் களுக்கும், நுண்பொருள் விரித்துப் பண்புடன் நடத்திய தலைவரவர்களுக்கும் என்றுங் குன்று நன்றி கூறப்பட்டு திருமுறை முழக்குடன் கூட்டங் கலைந்து.

குறிப்பு :—இம்மகா நாட்டுக்குச் சில செல்வருடைய அடிப்படையான பெருதவி கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர்கள் அதனருமை யறியமாட்டாது புறக் கணித்தது வருந்தத்தக்கதாக இருக்கிறது. இச்செல்வர்கள் என்ன செலவழித்து எத்துணைப் பெரிய காரியங்களை நடத்தினும், அறிவாளிகளைப் போற்றாதும் அவர்களுதவியால் கூடும் அன்பர்களின் அறிவிலூறும ஆனந்த வெள்ளத்தைப் பெருக்காதும் ஒழிந்தார்களாயின், அவர் தங்கடமையை முழுதுஞ் செலுத்தியவர்கள் ஆகவே மாட்டார்கள் என்பதை அவர்களுக்குத் திருவருள் உணர்த்தி உய்யக்கொள்ளுமாக. இவ்வாறு இச்செல்வர்கள் கைவிடினும், வேடம்பூர் வாசிகள் தங்கள் சொந்த வேலைத் தொந்திரவையும் பொருட்படுத்தாது முன்வந்து பணம், ஆள், வண்டிமாடு முதலியனவும் தந்து தங்கள் உடலுழைப்பாலும் உவட்புடன் பணிசெய்து மகாநாட்டை நிறைவேற்றித் தந்தது பெரிதும் போற்றத் தகுந்ததாம். அத்துடன் இம்மாகாணத்தில் அருந் தொண்டாற்றி வருபவரும் கும்பகோணம் நாகேச்சுர சுவாமி கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்தியவரும், ஆண்டு தப்பாது ஏழை அன்பர்கள் (தீண்டாதாருட்பட) பல்லாயிரவருக்குச் செஞ்சோறளித்து வருபவருமாகிய பாடகச்சேரி சுவாமிகளின் பெருமை சொல்லவும் பெரிதே; அவர்கள் இக்கும்பாபிஷேகத்தில் ஆற்றிய அருந்தொண்டு மலையினும் மாணப் பெரிதாகும்; அவர் நம் சமாஜத்தாருக்கும் வேண்டுமுன் விருப்புடன் பல உதவிகள் புரிந்ததும் போற்றற் பாலதாகும். மகாநாட்டு ஏற்பாடு முழுமையும் செய்து தமது பொருளுதவியையும்நல்கிக் கூட்டத்தை முன்னின்று முட்டின்றி நடத்திவைத்த திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை யவர்கட்கு சமாஜத்தின் நன்றி பெரிதும் உரித்தாகும்.

"உண்மையுரைப்போன்"

---

## நமது சமாஜ வெள்ளிவிழா அறிக்கை

வெள்ளிக் குழைத்துணி போலுங் கபாலத்தன் வீழ்ந்திலங்கு
வெள்ளிப் புரியன்ன வெண்புரி நூலன் விரிசடைமேல்
வெள்ளித் தகடன்ன வெண்பிறை சூடிவெள் ளென்பணிந்து
வெள்ளிப் பொடிப்பவ ளப்புறம் பூசிய வேதியனே.

—அப்பர்.

நமது சமாஜத்தின் வெள்ளிவிழா நிகழும் பிரமோதூத ஆண்டு ஆவணித் திங்களில் கிழக்கு மருதூரில் கூடும். "நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும், தாகூர் சட்ட விரிவுரையாளர் - திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்களும் (M. A. M. L.) முறையே முதல் நாள் இரண்டாம் நாள் தலைமை வகிப்பார்கள். தேதி, சொற்பொழிவாளர் முதலிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இங்ஙனம் :

ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

---

## திருவிழாவில் சமய போதனை

திருவையாறு ஏழூர்த் திருநாளை யொட்டி (சப்தஸ்தான மஹோத்ஸவம்) திருவாளர்கள் ச. சச்சிதாநந்தம் பிள்ளை, த. வே. உமாமஹேசுவரம் பிள்ளை, மறை - திருநாவுக்கரசனார், கி. நாராயணசாமியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், ச. சிவகுமாரன் ஆகிய சமாஜத் தொண்டர்கள் திருப்பழனத்திலும், திருச்சோற்றுத்துறையிலும் சப்தஸ்தானப் பல்லாக்கு அவ்வூர் கட்குச் சென்ற போழ்து சொற்பொழிவுகள் நிகழ்த்தி சமாஜப்பணி யியற்றினார்கள். திருவையாறு, மேலைப்புவனவாயில், விளாங்குடி, ஆலங்குடி என்ற தலங்களில் சமாஜத்தின் கிளைச் சபைகள் தாபிக்கப்பட்டன. திரு. மறை. திருநாவுக்கரசனார் பல ஊர்களில் சமாஜத் தொண்டாற்றி வருகின்றனர். அவ்விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.